# விலங்குப்பறவை

(ஹைக்கூ கவிதைகள்)



ச. வே. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குப்பறவை

(கைக்கூக் கவிதைகள்)

பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம்

வெளியீடு :
வெள்ளி அச்சுப் பதிப்பகம்
கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விலங்குப்பறவை |
| மொழி | : | தமிழ் |
| நூலாசிரியர் | : | பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் |
| முதற்பதிப்பு | : | புரட்டாதி - 2021 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு, அச்சுப்பதிப்பு, வடிவமைப்பு, அட்டைப்படம் | | வெள்ளி அச்சுப் பதிப்பகம் மிசிசாகா, ஒன்ராறியோ கனடா. ✆ 905 290 9116 |
| பக்கங்கள் | : | xxxii(32) + 80 = 112 |
| நூலின் அளவு | : | 1/8 கிறவுண் |

**இந்த நூலின் பெறுமதி** : இலங்கைப் பெறுமதிக்கு For Sri Lankan money ***200.00/=***
Price of this book : கனேடிய பெறுமதிக்கு For Canadian money ***$ 5.00***

| | | |
|---|---|---|
| Title | : | Vilankupparavai |
| Author | : | S. V. Panchadcharam |
| Language | : | Tamil |
| First Edition | : | August - 2021 |
| Type Setting, Printing, Publishing Cover Designing | | ***Silver Print House & Publication*** Mississauga Ontario L5V 2G7 Canada. ✆ 905 290 9116 |
| Copy Right | : | Reserved |
| Pages | : | xxxii(32) + 80 = 112 |
| Size of Book | : | 1/8 Crown |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எமது வெள்ளி அச்சுப் பதிப்பகத்தின் 7ஆவது நூலாக "விலங்குப்பறவை" ஹைக்கூ கவிதைத் தொகுதி வெளிவருகிறது. ஏற்கனவே இந்நூல் ஆசிரியர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், கவிஞர் வி. கந்தவனம், கவிஞர் வ. க. பரமநாதன், காலஞ் சென்ற கலாநிதி சிவநாயகமூர்த்தி, கவிஞை சிவ வதனி பிரபாகரன், மற்றும் கவிஞர் கட்டிக்குளம் சுந்தரமூர்த்தி (தமிழகம்) ஆகியோரின் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என முழுமையாக 6 நூல்கள் எம்மால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், இக்கொறோனா முடக்க நிலையின்போது எனது ஆசான், பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் "விலங்குப்பறவை" எனுங் ஹைக்கூ கவிதை நூலினை எழுதி முடித்துள்ளதாக அறிந்தேன். அதனை நூலாக அச்சிட்டு வெளியிடும் வாய்ப்பை எனக்குத் தரும்படி அவரை வேண்டினேன்.

உலகமே முழுமையாக முடக்க நிலையில் உள்ள காலச் சூழ்நிலையில், நூல்களை அச்சிடலில், வெளியிடலில், வாசகர்களின் கைகளுக்குச் சென்றுசேர வைப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் குறிப்பிட்ட அவர், இக் கவிதைகளைச் சிறு சிறு தொகைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைத்தளங்களில் வெளியிட்டு, வாசகர்கள் காட்டும் பிரதிபலிப்பைப் பொறுத்துப் பின்னர் நூலுருவில் வெளியிடுவது பற்றித் தீர்மானிக்கலாம் என்ற கருத்தினை முன்வைத்தார்.

அதற்கிணங்கி, 200 கவிதைகளையும் 25 கிழமைகள் எனதும், அவரதும் முகநூல்களில் வெளியிட்டோம். இணையத் தினசரியான தமிழ் சி. என். என். அவற்றை வாரந்தோறும் மறு பிரசுரஞ் செய்து வந்தது. அமரர் கீர்த்திராஜன், மற்றும் இணுவில் பொதுமுக நூலகத்தார், ப. தமிழ்மாறன், சுதர்ஜினி பாஸ்கரன், சுசிசிவா போன்ற பலரும் தங்கள் முகநூல்களில் பகிர்ந்து வந்தனர். பெருங்கல்விமான்கள், பேராசிரியர்கள், பண்டிதர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் உட்பட ஆயிரக் கணக்கான நல்லுள்ளங்களின் பாராட்டுகள் கிடைத்து வந்தன.

அமரர் கீர்த்திராஜன், பெரியார் சுந்தரம் டிவகலாலா, கவிஞர் அகத்தியன் தொல்காப்பியன், சுதர்ஜினி பாஸ்கரன், தமிழினிதேவன், சுஜந்தி சிவகாந்தன் முதலான பலர் இக்கவிதைகள் நூலாக அச்சிட்டுப் பேணப்பட வேண்டும் எனப் பெரிதும் வற்புறுத்தி வந்தமை எமக்குப் பெரும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் வழங்கிற்று. அவர்களுக்கு எமது நன்றி என்றென்றும் உரித்தாகட்டும் இக்கவிதைகளைப் படித்து மிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அணிந்துரையை வழங்கிய பேராசிரியரும், பேரறிஞருமான சபா. ஜெயராசா அவர்களுக்கும், நயந்துரை வழங்கிய அறிஞர், அதிபர் பஞ்சலிங்கம் அவர்களுக்கும், நூலின் பின்புற அட்டையிலே நூலாசிரியர் பற்றிய குறிப்பை வரைந்த கவிஞர் வ. க. பரமநாதன் அவர்களுக்கும், இக்கவிதைகளை மறுபிரசுரம் செய்து வந்த தமிழ் சி. என். என். இற்கும், ஏனைய முகநூல் நண்பர்களுக்கும், இக்கவிதைகளை இரசித்துப் பாராட்டி வந்த - அன்புள்ளங்கள் அனைவருக்கும், வேறும் வழி களில் ஒத்துழைப்பு வழங்கும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன், வணக்கம்.

01. 08. 2021

இங்ஙனம்

***முகுந்தன் சிவதாசன்***

வெள்ளி அச்சுப் பதிப்பகம்,

மிஸிஸாக்கா,

ஒன்ராறியோ மாகாணம், கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை



"விலங்குப்பறவை" கவிதைகளை வாரந்தோறும் தமது முகநூலிலும் மறுபிரசுரஞ் செய்து வந்ததோடு, அவற்றை முழுமையாக நூலுருவில் அச்சிட்டு வெளியிட்டுப் பரப்பும் படியும் என்னை விடாப்பிடியாக வற்புறுத்திவந்து, என் வாக்குறுதி பெற்றே ஓய்ந்தவர், யாழ் உரும்பிராயில் **செல்வரத்தினம் நாகராஜன்** எனவும், வவுனியா உக்குளாங் குளத்தில் **கீர்த்திராஜன்** எனவும் அறியப்பட்டிருந்த ஓர் உன்னத தமிழினப் பற்றாளர்! இடைவயதில் இன்று அவர் அமரர் ஆகிவிட்டார். அவருக்கும், அவர் போன்று தமிழினப் பற்றுமயமாகி, தமது இன்னுயிர்களை ஈகம் செய்த பல்லாயிரம் தாய்மை நெஞ்சர்களுக்கும் இந்த நூலை என் தலைதாழ்த்திக் காணிக்கை ஆக்குகின்றேன்.

– பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயந்துரை

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுடன் ஒன்றாக யாழ். இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய மையை ஒரு பேறாகக் கருதுகிறேன். ஆழ்ந்த இறை பக்தியும், இனப்பற்றும் கொண்டவர். 100இற்கும் அதிக நூல்களை எழுதி, வெளியிட்டவர். அவற்றுள் அவரின் சிறுகதை நூல்கள் பலவற்றை வாசித்துள்ளேன். அந்நூல்களில் யுத்தக்காலப் பிற்பகுதியில், சில ஊடுருவற் புல்லுருவிகளின் நடத்தை பற்றிய கவலை அவரை வாட்டியது புலனாகிறது. அவர்களால் "இனத்தின் இறை நம்பிக்கை நலிவிக்கப்பட்டது" என்ற அவரின் ஆதங்கம் வெளிப்படுகின்றது.

ச. வே. அவர்கள் தமது தாய்மொழி ஆற்றலாலும், பண்பான நடத்தையாலும் மாணவர் களின் நன்மதிப்பைப் பெற்றவர். மாணவர்களின் அவர் பற்றிய மதிப்பீடு பின்வருமாறு அமைந்தது: "பாடமுங் கற்பித்தாய்! கவிதை பாடவுங் கற்பித்தாய்! அறிவைத் தேடவுங் கற்பித்தாய்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. வே.யின் "விலங்குப்பறவை" கைக்கூ கவிதை நூல் ஓர் உன்னதமான படைப்பு! மூன்று வரிகளில் அன்றாட நிகழ்வுகளை, அனுபவங்களைப் பாமர மக்களும் விளங்கும் வண்ணம் - ஆனால் ஆழ்ந்த கருத்துக் கொண்டவையாக எழுதியுள்ளார்! இக்கவிதைகளை அவர் தொகுதிகளாக முகநுலில் வெளியிடும்போது, நான் ஆவலோடு அவற்றை வாசிப்பதுண்டு.

சிலவரிகள் உள்ளத்தில் வலிகளை ஏற்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக நமது கோவில் வேள்விகள்பற்றிக் கூறும்போது, "நம்பும்படி ஊட்டி வந்து, நம்பிவரப் பிடித்து வெட்டல் மிகக் கொடிய சேய்க்கொலை" என்றவாறு!

ச. வே. அவர்கள் நீடூழி வாழ்ந்து, மேலும் பல படைப்புக்களைச் சமூகத்துக்கு வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

28. 06. 2021

– **அ. பஞ்சலிங்கம்**
(முன்னாள் அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழக
இராமநாதன் நுண்கலைப் பீட
முன்னாள் தலைவர்
**பேராசிரியர் சபா. ஜெயராசா**
அவர்கள் வழங்கிய



# அணிந்துரை

ஹைகூவின் கலைத் தனித்துவமும், நுண்ணிய கருத்தலைகளைக் கிளர்ந்தெழச் செய்யும் குறு வடிவமும், எண்ணிறந்த மனப்படிமங்களை வரு விக்கும் சொற் பின்னல்களும் ஜப்பானிய எல்லை களைக் கடந்த உலகப் பரவலுக்கு அதனை இட்டுச் சென்றுள்ளன.

தியானத்தையும், ஆழ்நிலை மனவொடுக் கத்தையும் வலியுறுத்திய ஜப்பானிய சென். பௌத் தத்தின் கருத்தியல் நீட்சியைக் கையளிக்கும் கலைவடிவமாகவும் ஹைகூ நீட்சி கொண்டது. மேலமைந்த கருத்தும் ஆழப்புதைந்த கருத்துமாக அமையும் சென். பௌத்தத்தின் கருத்தாடற் புதையலை ஹைகூ மனவெளிக்கும், இலக்கிய வெளிக்கும் கொண்டு வந்தது.

செவியின்பமும், கருத்தியற் கனதியும், கட்புல னையும், செவிப்புலனையும் அலைய விடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைக்கும் தியானச்சுவையும் கொண்ட அந்த வடிவம் ஆரம்பத்தில் ஹொக்கூ *(Hokku)* எனப்பட்டது. அனுபவ நீட்சியில் அதன் பெயர் "ஹைகூ" என்ற முகிழ்ப்பைப் பெற்றது. அதன் வடிவத்திற்குச் செப்பமும், செழுமையும் கொடுத்தவர் கவிஞர் பாசோ அவர்கள்.

முதலாம் அடி ஐந்து அசைகளையும் (நேரசை), இரண்டாம் அடி ஏழு அசைகளையும், மூன்றாம் அடி மீளவும் ஐந்து அசைகளையும் கொண்டிருத்தல் அதன் பொதுவான வடிவம். அதில் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. மகாகவி பாரதிக்கு ஹைகூ பற்றிய விளக்கம் இருந்ததாயினும் அவர் காலத்தில் அந்த வடிவம் தமிழில் வளர்ச்சி கொள்ளவில்லை.

நவீன கதையாக்கப் பரவலுடன் இணைந்த நிலையிலும், அதன் செல் நெறியிலும் ஹைகூ வடிவம் தமிழில் பெருக்கெடுக்கலாயிற்று. அதன் கட்டமைப்பின் எளிமையும், வீச்சும் கவி தையாக்க முனைப்புக்குத் திறந்த வாயிலைக் கொடுத்துள்ளன.

ஹைகூ கவிதைத் தொகுதிகள் தமிழில் வெளிவரலாயின. யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் கனதியான இலக்கிய இதழாகிய "ஜீவநதி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைகூ சிறப்புமலர் ஒன்றை வெளியிட்டுத் தடம் பதித்துள்ளது.

தமிழ்ச்செய்யுள் இலக்கண மரபில் ஆழ்ந்து ஊறிய பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள், ஹைகூ கவிதைப் புனைவுக்கு வந்திருத்தல் புதுமை நோக்கிய பழைமையின் நீட்சியாகின்றது.

புலம் சிதறிய நிலையும், தாயக வாழ்வின் நுண் கூறுகளின் மீட்பும், பெருநிலை அழுத்தங்களால் நிகழும் அதிர்வுகளும் அவரின் ஹைகூ கவிதை களின் உட்பொதிவுகளாகின்றன.

தாயக மீட்பின் குறியீடாகவும், ஆழ்மன இருப்பின் இறை படிமங்களாகவும் விளங்குபவை கிராமத்துத் தெய்வங்கள். நூலின் நுழைவாயி லாக அமையும் "இறை ஓம்பலில்" அவர் "ஐந்து கைக்கோன்" அருளை விளித்திருத்தல் மரபு வழிச் செய்யுள் ஆக்கத்தின் தொடர்ச்சியையும், தாயக இருப்பின் நினைவுப் பதிவுகளையும் மீட்டெடுத்தலாகின்றது.

**"அருளாளர், வள்ளல்கள்**
**மானுடப் பாலை வனங்கொள்**
**இன்பப் பசுந்தரைகள்!"**

என்ற கவிதையில் தமிழ் மரபும், ஹைகூவும் இணைந்து செழுங்கலவையாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல்" "தாயக ஓம்பல்" பகுதியில் நீள மேற்கிளம்பல் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**"மனிதர்கள் காணாமல்**
**ஆக்கப் படலாம், அறமுமா**
**காணாமற் போய்விடும்?"**

நனவு நிலை, நனவிலி நிலை என்ற மன அடுக்கில், நேர்ப்பொருளுரைத்தல் நனவு மனத் தொடர்பாடலின் முக்கிய பரிமாணம். ஒப்பீட்டளவில் நேர்ப்பொருளுரைத்தலுக்கு முதன்மை கொடுத்தல் "விலங்குப்பறவை" ஆக்கங்களில் எழுகோலம் பெற்றுள்ளது. "வாழ்வு ஓம்பல்" பகுதியிலும் அந்தப் பரிமாணமே ஊடுநிகழ்த்துகை செய்கின்றது.

**"வழங்குகின்றேன் ஹைக்கூ**
**வாசிப்போர் தொகை பெருக்கி**
**வளர்விக்கத் தமிழை!"**

என்றவாறு, தமிழ் கவிஞரின் வாழ்வுமாகின்றது, தொழிலுமாகின்றது, உயிர் கலந்த இலக்கு மாகின்றது.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின் கவிதைப் புலமை ஆழமும், செறிவும் கொண்டது. செய்யுள் புனைதலை அவர் ஒரு புலமைப் பயிற்சியாக மட்டும் கொள்ளவில்லை. வாழ்வுடன் இணைந்த உணர்ச்சிச் செறிவூட்டலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளையும், கவிதையையும் தரிசித்தவர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். அந்தத் தரிசனமே மிக இளம் வயதிலிருந்தே சமூக நோக்குடைய கவிதை களை ஆக்கும் ஆற்றலாக அவரிடத்தே முகிழ்த் தெழுந்தது. அழகியல் உயிர்ப்பையும், சமூக உயிர்ப்பையும் இணைக்கும் அவருடைய ஆக்க முயற்சி ஹைகூ ஆக்கத்தில் மேலும் முனைப்புக் கொண்டது.

இணுவைக் கிராமத்துக் கலை வளத்திலும், கவி வளத்திலும் காலூன்றி அவரின் கவிதைத் தரிசனத்துக்குக் கிடைத்த முதல் அங்கீகாரமாகச் சாகித்திய மண்டலப் பரிசும், வெகுமதியும் கிடைக்கப் பெற்றன. அதனை அவர் தமது கவிதை நெடுவழிப் பயணத்தின் நிரந்தரமான தரிப்பிடம் ஆக்கிக் கொள்ளவில்லை.

தொடர்ந்து படித்தல், தொடர்ந்து எழுதுதல், சமூக நெருக்குவாரங்களைக் கலையாக்க வெளிக்குக் கொண்டுவருதல், முதலாம் பரிமாணங் களோடு உறவாடி வருபவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். அதனால் அவரது ஆக்கங்கள் என்றுமுள்ள உயிர்ப்புடன் உலா வருபவை.

பழைமையோடு மட்டும் ஒன்றித்து நிற்கும் ஒற்றைப் பரிமாணப் பண்டித மரபில் உடைப்பை ஏற்படுத்தியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். அவர் மேற்கொண்ட ஆக்கநிலை உடைப்பைப் புரிந்து கொள்ளாதவர்களும் இருந்தனர். அந்நிலையில் தமிழியலுக்கு அவர் வழங்கிய ஆக்க அளிக்கைகளை வியந்து, இலங்கைப் பல்கலைக் கழகம், கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் முன்னெடுத்த ஆக்கநிலைத் திருப்பத்தின் தொடர்ச் சியை முன்னெடுத்து வரும் பண்டிதர்களுள் ஒருவராக விளங்குபவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். தமிழுக்கு அன்னியமாகிய ஹைகூ கவிதை வடிவத்தைத் தெரிந்தெடுத்தமையே பண்டிதமரபில் நிகழ்த்தப்பட்ட "ஆக்க நிலை உடைப்பு" என்று அடையாளப்படுத்தலாம்.

மரபு வழியான பண்டித மரபில் கடினமான சொற்பிரயோகங்களும், இறுக்கமான சொற்புணர்ச் சிகளும் மேலோங்கி நிற்கும். அந்தத் தளத்தை விட்டு நீங்கி, எளிமையான சொல்லாடலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். அந்த மரபை முழுவீச்சுடன் முன்னெடுத்து வருபவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம். அவரின் ஹைகூ ஒவ்வொரு பாவிலும் எளிமையும், சுற்றிவளைக்காத நேரியம்பலும் அழகியற் பதிவுகளாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பநிலை வாசகருக்கும் எட்டப்படக்கூடிய சொல்லாடலும், கருத்துக் கட்டமைப்பும், ஓசைச் செறிவும் ஒவ்வொரு நிலையிலும் ஹைகூவில் வெளிப்பாடு கொண்டுள்ளன.

புதுமை நாட்டம் கொண்ட பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் மொழியின் தனித்துவத்தையும், மொழியின் தளமாகிய இலக்கணத்தையும் தொடர்ந்து வலியுறுத்தி வருதல் குறித்துரைக்கத் தக்கது. அவரால் எழுதப்பட்ட "தமிழ் இலக்கணப்பூங்கா!" நூல் அவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. பிரதிகள் பல்லாயிரம் விற்பனையாகியமை அந்நூலின் சிறப்பை மீள வலியுறுத்துகின்றது. அவரின் நீண்டகாலக் கற்பித்தல் அனுபவப் பின்புலத்தில் அந்நூல் ஆக்கம் பெற்றுள்ளது. இலக்கண விதிகள் எளிமையாகவும், சுவைபடவும் விளக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமகாலத்துக்குரிய எடுத்துக்காட்டுகள் நூலின் பயன் விளைவை மேலோங்கச் செய்துள்ளன.

அவரின் நீண்டகாலக் கற்பித்தல் அனுபவம் ஹைகூ ஆக்கத்திலும் நீட்சி கொண்டுள்ளது. மாணவர்களுக்குக் கற்பிப்பது போன்ற முகிழ் கோலத்தில் ஹைகூ புனையப்பட்டுள்ளது. வகை மாதிரிக்கு ஒரு ஹைகூவைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“படிப்பறிவால் சான்றிதழ்!**
**பட்டறிவாலே வாழ்வு நெறி!**
**தேவை இரண்டுமே!”**

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களது கவிதை வாழ்வு சமூக நோக்குடன் இணைந்தது. சமூக அவலங்களும், கூர்ப்படையும் சமூக முரண்பாடுகளும் அவரது ஆக்கங்களிலே ஆழ நீட்சி கொண்டுள்ளன.

கவிதையை வெறும் பொழுது போக்கு இன்ப அலகுக்குள் அவர் கொண்டு செல்லவில்லை. கவிதையூடாகக் கையளிக்கப்படும் செய்தியின் முக்கியத்துவம் அவரால் உணரப்பட்டிருந்தது.

கவிதையின் அழகியல் ஆக்கம் உருவத்தில் மட்டுமன்றி, உள்ளடக்கத்திலும் கால் பதித்துள்ளது என்பது அவரது அசையாத நம்பிக்கை. சமூக நலன் மீது கொண்ட அதீத ஈடுபாட்டால் உள்ளடக்கம் அல்லது கையளிக்கப்படும் செய்திக்கு மிகையான அழுத்தம் கொடுத்தலும் இடம்பெற்றுள்ளது. பின்வரும் ஹைகூ அந்த வெளிப்பாட்டைப் பதிவு செய்கின்றது.

**“மகன் படிக்கச் சென். ஜோன்ஸ்!**
**அப்பா உரிமைப் போரில் கெட**
**ஏழைசேய் ஊர்ப்பள்ளி!”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை அமைதியும், கையளிக்கும் பொருளும் கவிதையின் சிறகுகள் என்ற மரபில் வந்தவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். அத்தகைய உறுதியான கலைத்தளத்தில் நின்றே, அவர் சமகாலப் பிரச்சினைகளைக் கலைவெளிக்குக் கொண்டுவருவதற்கு ஹைகூ வடிவத்தைத் தெரிவு செய்துள்ளார்.

கவிஞரது ஆக்கங்கள் ஒவ்வொன்றும் ஒரு கருத்து வினைப்பாட்டை ***(Discourse)*** முன் வைப்பவை. அவை அளவில் சுருக்கமானவையாகவும், சிந்தனையை மேற்கிளம்பச் செய்வனவாகவும் அமைந்துள்ளன. சிறிய கட்டுமானம் பெரிய விளைச்சலைக் கொடுக்கின்றது. மேலாதிக்கம் எவ்வெவ் வழி களில் நீட்சி கொண்டுள்ளது என்பதை அந்த ஆக்கங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் குறித்துரைக்கின்றன. மேலாதிக்கத்தின் நுண்ண லகுகள் வெளிப்படுத்தப் படுகின்றன.

புறத்தூண்டிகள் கவிஞரைத் தடுத்து விடு வதில்லை. அந்த விசைகளினூடாக விண்டெழு பவனே உண்மைக் கவிஞனாகின்றான். கவிஞர் தமது அளிக்கை வாயிலாகவே அதனைப் பிர கடனப் படுத்தியுள்ளார்!

**"தொட்டாற் சுருங்கி செடி!**
**தொட்டுச் சீண்டப் பொங்கிப்**
**பாடுவோன் கவிஞன்!"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சல் கவிதைக்கு விசை கொடுக்கின்றது. பெருங்கவிஞர்கள் துணிச்சலின் தூண்டல் வடிவினராகவே மேலெழுந்தனர்.

கவிதை சமூகத்தின் அழகியல் வடிவமாக மட்டுமன்றி, கருத்து வினைப்பாடாகவும் மேற்கிளம்பல் கொள்கின்றது. அந்த எழுச்சி சாதனையின் நீட்சியாகப் படி மலர்ச்சி கொள்கின்றது.

**"சாதனைப் பட்டியலின்**
**நீளமே வாழ்வின் நீளம்! அன்றி**
**ஆண்டுகளின் அல்ல!"**

தவநிலையிலிருந்து கவிதை படைப்பவர் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். அதனால் அவர்களின் கவிதைகள் தவநிலைச் சாதனங்களாகின்றன!

கவிஞரது தவமுயற்சி தொடரவும், வளரவும் நீண்டெழும் எமது வாழ்த்துக்கள். கவிதை வாழ்க்கை நீண்டு, நீண்டு வளர மீள வாழ்த்துக்கள்!

**– பேராசிரியர் சபா. ஜெயராசா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்து இனவழிப்புக்கு உள்ளாக்கப்படத் தொடங்கிக் கொண்டிருந்த ஈழத் தமிழினத்தை மீண்டெழத்தூண்டும் அதிமுதன்மையான எழுத்துப் பணியைச் செய்ய ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் அந்த நேரம் முற்று முழுதாகத் தவறியிருந்தமையே இன்று ஈழத்தமிழ்ச் சமூகம் அழிவின் விளிம்பில் நின்று கலங்கக் காரணமாகியது.

1948இல் இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்று அதன் ஆட்சி அதிகாரம் முழுமையாகப் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட சில ஆண்டுகளுக் குள்ளேயே தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை, 1958இல் இனக்கலவரம் மூலம் ஏராளம் தமிழர்கள் சிங்களவர்களால் கொல்லப்பட்டமை, வடக்கிலும், கிழக்கிலும் தமிழர் தாயக நிலங்கள் பெரு மளவில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டமை, தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களங் கற்பிக்கப் பௌத்த பிக்குகள் நியமிக்கப்பட்டமை என்பவற்றின் மூலம் இலங்கையில் தமிழின அழிப்புத் தொடங்கியுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரவும் போகிறது என்ற உண்மை அன்றே ஈழத்தமிழர்களால் நன்கு உணரப்பட்டு விட்டது.

அதனால் தமிழர்களுக்குக் கூட்டாட்சி அடிப்படையிலான மாநில சுயாட்சி உரிமை அல்லது சுதந்திரத் தனித்தமிழ் ஈழம் பெறப்படவேண்டும் என்று ஒவ்வொரு தமிழனும் தீர்மானித்திருந்தான். அந்த இலக்கைக் கொண்டிருந்த தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சிக்கே அநேகமாக முழுத்தமிழர் வாக்குக்களும் வழங்கப்பட்டு, அக்கட்சியினரே தெரிவு செய்யப்பட்டு 1977இல் நாடாளுமன்றத்தில் அவர்களால் அக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

நாடளுமன்றத்தினுள்ளும் தமிழர்க்கான அந்த நீதி மறுக்கப்பட்ட நிலையில், அந்தநீதி கோரித் தமிழ் மக்கள் திரண்டு தமிழரசுக்கட்சித் தலைவர்களின் ஏற்பாட்டில் அமைதி வழியில் சத்தியாக்கிரகப் போராட்டங்களை மேற்கொண்டனர். அவைகள் கூட அரசின் ஆயுதப்படைகளால் அடித்து நொறுக்கி நசுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இனக்கலவரத்தைத் தூண்டி இலங்கை அரசு 1977, 1983களிலும் ஆயுதப்படைகளையும், சிங்களக்காடையரையும் கையாண்டு தீவின் பல பாகங்களிலும் தமிழ் இன அழிப்பை நிகழ்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். தமிழர் சொத்துக்கள் சிங்களக் காடையரால் கொள்ளையடிக்கப்பட்டன, தீக்கிரையாக்கப் பட்டன. மேலும் தமிழ் மாண வரின் உயர்கல்வி வாய்ப்பைப் பறிக்கும் விதத்தில் தரப்படுத்தல் திட்டம் என்பது நடை முறைப் படுத்தப்பட்டது. குடும்பநலத்திட்டம் என்ற போர்வையில் கருத்தடைச் சிகிச்சை மூலம் தமிழரின் இனப் பெருக்கம் முடக்கப்பட்டது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தவுடனான இந்தக் காலகட்டத்தில்தான், ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் அங்கு தமிழின அழிப்பு நடப்பதை நன்குணர்ந்திருந்தும், அதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுத் தமது எழுத்துக்கள் மூலம் அக்காலத்தமிழ் மக்களுக்குப் போராட வேண்டிய அவசியத்தை உணரவைக்கத் தவறிவிட்டனர். அற வழியில், வன்முறையற்ற அமைதி வழியில் போராடித் தான் நமது எதிர்காலத்தை, இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தமிழ்த் தலைவர்கள் முனைந்த போது, அம் முயற்சி அரச பயங்கரவாதத்தால், வன்முறை வழியில் ஒடுக்கி நசுக்கப்பட்டபோது, தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில், திரண்டெழுந்து போராட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்களை உருவாக்கிப் போராடியிருந்தால் இன்று இந்தியாவில் விவசாயிகளின் போராட்டம் போல், மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டம் போல் அந்தப் போராட்டமும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துத் தலையிட வைத்துத் தமிழினத்துக்கு இலங்கையில் பாதுகாப்பான உரிமை வாழ்வைப் பெற்றுத் தந்திருக்கும். அதன்மூலம் ஒரு சில ஆயிரம் போராட்டக்காரரின் உயிர்த்தியாகங்களோடு தமிழருக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கும். ஆனால் அன்று இந்த முக்கிய பிரச்சினை அந்தத் தமிழ் எழுத்தாளர்களால் கண்டு கொள்ளப்படவில்லை. அக்காலகட்ட எழுத்தாளர்கள் நெருங்கிக்கொண்டிருக்கும் எரிமலை வெள்ளத்தை மக்கள் உணரும்படி இலக்கியங்கள் படைத்தும், போராட ஊக்கியும், இனங்காக்க இறையருள் வேண்டுகிற இலக்கியங்கள் பாடியும் தீவிரமாக உழைத்திருந்தால் அறவழிப் போராட்டம் அன்றே வென்றிருக்கும். பின்னாலான ஆயுதப் போராட்டத்தினாலான பேரழிவுகளைத் தவிர்த்து, நம் தேசம் விடுதலையும் பெற்றிருக்கும். 4 1/2 இலட்சம் அப்பாவித் தமிழுயிர்களைப் பலிகொடுத்தும், தாயக நிலப்பரப்பின் பெரும் பகுதியைப் பறிகொடுத்தும் அழிவின் விளிம்புக்கே சென்று நிற்கிற இன்றைய பரிதாப நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினத்துக்கு ஏற்பட்டிருக்காது. அன்று நம் எழுத்தாளர்கள் கவனம் இப்பிரச்சினையின் பக்கம் திரும்பவோ, மையங்கொள்ளவோ, தவறியமைக்குச் சில சூழ்நிலைகளும் பக்கத்துணையாகியுள்ளன.

பொதுவுடைமை வாதத்தையும், இலங்கைத் தேசிய வாதத்தையும் முக்கிய கோட்பாடுகளாகக் கொண்ட சீனச்சார்பு, ருசியச்சார்பு இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு இலங்கையில் கோலோச்சிக் கொண்டிருந்த காலமும் இதுதான். ஈழத்தேசியக் கொள்கையையே உயிரிலட்சியமாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பாலோர் அந்த முதன்மைக் கடமையை மறந்தவராய், தமிழின அழிப்பையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த ஆளும் இனத்தின் இலங்கைத் தேசியத்தையே ஆதரிப்பவர்களாக, வர்க்கப்போராட்டம், சாதிப் போராட்டம், தமிழ் நாட்டு இலக்கிய எதிர்ப்புப் போராட்டம் முதலியவற்றையே முதன்மைப் படுத்தி இலக்கியம் படைத்துக் கொண்டிருந்தார்கள்.

அத்தோடு, சிங்கள அரசுகளின் மேற்குறிப்பிட்ட திட்டமிட்ட இன அழிப்பு முயற்சிகளை அம்பலப்படுத்தி எழுதிய ஒரு சில இனப்பற்று எழுத்தாளர்களைப் பிற்போக்காளர்களாக மறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாகச் சித்திரிக்கும் விதத்தில், இடது சாரிகள் தமது எழுத்தாளர் சங்கத்துக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்று விருதுப் பெயரும் சூட்டி, தமிழுணர்வு எழுத்தாளர்களை ஒதுங்கவோ, தங்கள் முற்போக்கணியில் வந்து சேரவோ வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த முற்போக்கு அணியினருக்குக் கிடைத்த ரூசிய அரசின் நிதியுதவியும், அச்சுத்தாளன்பளிப்புகளும் ஏனைய எழுத்தாளர்களுக்குக் கிடைக்காததோடு, அச்சீட்டு வசதிக் குறைவும் அன்று விடுதலை இலக்கியங்கள் வெளிவரத் தடையாக அமைந்தன.

இதற்குள் இந்த முற்போக்கு எழுத்தாளர்கள் எனத் தங்கள் முதுகுகளில் தாங்களே தட்டிக் கொண்டவர்களுள் பிளவு ஏற்பட்டு, அதிலிருந்து கிளைத்து உருவானது நற்போக்கு எழுத்தாளர் என்றோர் அணி. இந்த அணிக்குக் கூட ஈழத்தமிழினம் எதிர்நோக்கி நின்ற பேரபாயம் பற்றிய பொறுப்புணர்ச்சியோ, சிந்தனையோ இருக்கவில்லை.

இலங்கையில் தமிழின அழிப்பு இனக்கல வரங்கள் பல நடந்து முடிந்திருந்த காலகட்டத்தில், இந்தியப் பத்திரிகையான “கல்கி” இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் மட்டும் பங்கு பற்றவென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறுகதைப் போட்டி நடத்தியிருந்தது. அப்போட்டியில் முதல் பரிசு, ஆறுதல் பரிசுகள் பெற்றுக் கல்கியில் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வந்த சிறுகதைகள் அனைத்தும் தமிழ், சிங்கள இன ஐக்கியத்தை வலியுறுத்தும் வகையில் எழுதப்பட்டிருந்தன. அழிவைத் தடுக்க எழுதத் தவறிவந்த வரலாற்றுத் துரோகத்துக்கு மேலும் ஒரு படி மேலேயே போய், தமிழினத்தைக் கொலை காரன் கையில் தேடிப்போய் மாட்டுண்டு, மாளும்படி தூண்டிய இனக்கொலைத் துரோகத்தைக் கூட அன்றைய ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் செய்திருந்தனர் என்பது மிகையன்று.

அவ்வாறு 30 ஆண்டுகள் நடந்து, தோல்வி கண்டு கைவிடப்பட்ட ஆரம்பகால ஜனநாயக அமைதி வழிப் போராட்ட அணுகுமுறைக்கே இன்று நாம் மீண்டும் திரும்பி வந்து நிற்கிறோம். ஆனால், எமது வன்முறையற்ற அமைதிவழிப் போராட்டத்துக்கு அன்றிருக்காத உலகமயப் பிரசித்தம், சர்வதேசக் கண்காணிப்பு இன்றுள்ளன. அன்று நம் மக்களிடமில்லாது இருந்த போராடும் துணிச்சல், புலத்திலன்றி நிலத்திலும் இன்று, கடந்தகால ஆயுதப்போராட்டத்தின் நன்கொடை யாக, முனைப்புற்று நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் முந்திய 30 ஆண்டு அறப்போராட்டக் காலத்தமிழ் எழுத்தாளர்கள் விட்ட பிழையை இன்றுள்ள தமிழீழ எழுத்தாளர்களும் - நாமும் விட்டுவிடக்கூடாது. “இம்மென்றால் சிறை வாசம்! அம்மென்றால் வனவாசம்!” என்ற உயிரச் சுறுத்தலுள்ள ஈழம் வாழ் தமிழ் எழுத்தாளர்கள் தமிழ் மக்களிடையே தண்டனைத் தலைவிதி அழிக்கும் அறவொழுக்கத்தைப் பரப்பிக் கடவுளின் அருள் பலம், ஆன்ம பலம், பெருக்கும் இலக்கி யங்களையேனும் படைக்க வேண்டும், வெளியிட வேண்டும்!

என் போன்று புலத்து நாடுகளில் வாழ்வோர், மேற்கூறிய தன்மை கொண்ட இலக்கியங்களோடு, இன விடுதலை, தேச விடுதலைக்கு உழைக்கும்படி நிலத்திலும், புலத்திலுமுள்ள தமிழர்களை உந்தும் இலக்கியங்களையே நிறையப் படைத்து வெளியிட வேண்டும். இலங்கையில் சிங்கள இனம் முழுமையும் தமிழினத்தை அழித்தொழிக்கும் முதன்மை இலக்குடனே நகர்கிறது. ஆனால் 25 வீதம் தமிழர்களுக்குக்கூட அந்த அழிப்பிலிருந்து தம்மினத்தைக் காத்துக்கொள்ளும் முனைப்பு இன்றுமில்லை. முழு ஈழத்தமிழருக்கும் இந்த முனைப்பை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இன்றைய எழுத்தாளர்கள் கையிலேயே உள்ளது. அந்த வகையில் கொள்கை பரப்பும் விழாக்கள், பத்திரிகைகள் என்பவற்றில் அத்தகைய பணிகளைச் செய்து வந்த படைப்பாளிகளுக்குக் கொறோனா நோய் ஏற்படுத்திய முடக்கம் பெரும் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

இந்த இடர் நிலையிலும் வானொலிகள், தொலைக் காட்சிகள், இணையத்தளங்களைப் பயன்படுத்தி இனக் காதல் எழுத்தாளர்களோடு நானும் ஈழத்தேசிய இலக்கியப் பங்களிப்பைச் செய்து வருகையில் எனது மாணவி ஜெனிவா வாழ் கவிஞை திருமதி. இந்திரகுமார் ஜமுனாமலர் B. A. ஆசிரியை அவர்கள் தமிழ் நாட்டுத் தேனீ கலை இலக்கிய மன்றம், தென்குமரிக் கவிதைக்களம், ஹைக்கூப் பூஞ்சோலை போன்றவற்றின் ஹைக்கூ கவிதைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெறும், தாம் போட்டிக்கு அனுப்பும் கவி தைகளை மெருகூட்டலுக்காக எனக்கு அனுப்பி வைக்கும் போதெல்லாம் என்னையும் ஹைக்கூ கவிதைகளும் எழுதும்படி வற்புறுத்தி வந்தார்.

நான் வன்னியில் வசித்து வந்த 1998ஆம் ஆண்டுக் காலத்தில் "அமுதோன்" எனும் பெயரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுக் கவிஞரின் அழகிய ஹைக்கூ கவிதை நூலொன்றை இரசித்துப் படித்து ஹைக்கூ இலக் கணங்களை நன்கு அறிந்திருந்தேன். ஆனால், அந்த அனல் பறக்கும் ஈழப் போர்க்காலத்தில் கவிதைகள் காட்டாற்று வெள்ளமாக - நீண்டவையாகவே என்னுள் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தனவேயொழிய ஒளிமணிகளான - தத்துவ முத்துக்களான சிறு ஹைக்கூ கவிதைகள் பாடும் மனநிலை அப்போது எனக்கு வரவில்லை.

ஆனால் இன்றைய - அமைதி வழியில், நிதான நகர்வில் சென்று கொண்டிருக்கும் ஈழவிடுதலைப் போராட்ட உத்தி முறைக்கு உந்துகின்ற கவிதை- களைப் பாட ஹைக்கூ வடிவம் மிகச் சிறப்பாகப் பயன்படும் என்று கண்டேன் . தமிழ் மக்களின் சிந்தனையைக் கிளறியும், நெஞ்சங்களை உலுக்கியும் விடுதலைப் பயணத்தில் இணைய வைக்க மிகவும் உதவுமெனவும் நம்பினேன். எழுதத் தலைப்பட்டேன். அவ்வப்போது அப்படி எழுதித் தொகுத்த ஹைக்கூகளே, “விலங்குப்பறவை” எனும் மகுடம் சூட்டப்பட்டன!

இந்த 200 கவிதைகளும் 4 வகைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இறை ஓம்பல் 2) தாயகம் ஓம்பல்
3) வாழ்வு ஓம்பல் 4) உண்மை ஓம்பல்

எனபனவே அவை.

1) மனித வாழ்வு மனித வாழ்வாகவே மலர்ச்சி பெற இறை நம்பிக்கை பேணுதலே அடிப்படை. (இறை ஓம்பல்)

2) மனிதனை உண்மையாகப் பேணும் தாய் மண்ணைப் பேணலே அவன் பாதுகாப்பின் அடிப்படை. (தாயகம் ஓம்பல்)

3) மகிழ்வாக வாழ்வதற்கே வாழ்வு என்பதால் அந்த வாழ்வைப் பேணுவதே நல்வாழ்வின் அடிப்படை. (வாழ்வு ஓம்பல்)

4) இனிக்கும் உண்மைகளை மட்டுமன்றிக் கசக்கும் உண்மைகளையும் ஏற்று நடு நிலையுடன் வாழும் வாழ்வே இம்மைக்கும், மறுமைக்கும் நன்மை பயக்கும் அடிப்படை! (உண்மை ஓம்பல்)

இக்கவிதைகளை நான் எழுதி முடித்துள்ளேன் என்றறிந்து என் அன்பு மாணவன் முகுந்தன் சிவதாசன் என்னிடம் கேட்டு வாங்கி, எனது ஆலோசனைப்படி அவரதும், எனதும் முகநூல் களில் 25 வாரங்களாகத் தொடர்ந்து கவர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமாக வெளியிட்டு வந்ததன் மூலம், பல்லாயிரம் இரசிகர்கள் படிக்கவும், ஏராளமானோர் பாராட்டவும் காரணமாய் அமைந்தார். அதற்காகவும், இன்று நூல் உருவில் தமது மிஸிஸாகா வெள்ளி அச்சுப் பதிப்பகத்தின் மூலம் அவற்றை வெளியிடு வதற்காகவும் எனது நன்றியையும், வாழ்த்தையும் இத்தால் முகுந்தனுக்குத் தெரிவிக்கின்றேன்.

தமது இணைய இதழான தமிழ் சி. என். என். இல் வாரந்தோறும் இக்கவிதைகளை மறுபிரசுரஞ்செய்து வந்ததன் மூலம் மேலும் பல்லாயிரம் வாசகர்கள் படித்துப் பயன் பெற்றுப் பாராட்டக் காரணமான கலாநிதி முத்துக்குமாரு - அகிலன் அவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்.

பழைய தமிழ்ச் சொற்களுக்குப் புதிய கருத்துப் பரிமாணங்கள் பிறக்கும் விதத்தில் அவற்றைக் கையாளுகின்ற புரட்சி வசனநடையின் தந்தையாக விளங்கும் - அகன்ற வாசிப்பும், ஆழ்ந்த சிந்தனைப்புலமையுங் கொண்ட அறிஞர் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களுக்கும், கனதியான ஓர் அணிந்துரையை "விலங்குப் பறவைக்கு" வழங்கியமைக்காக, எனது நன்றியை அறியத்தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நயந்துரை" என்ற பெயரில் எனக்கு ஆசியுரை வழங்கியுள்ள கல்விமான், என்மீது சிறப்புப் பாசமும், நன்மதிப்புங்கொண்ட என் யாழிந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் அவர்களுக்கும் என் பணிவான நன்றி!.

"இந்நூலாசிரியரைப் பற்றி" குறிப்புரை வழங்கிய கவிஞர். வ. க. பரமநாதன் அவர்களுக்கும் எனது நன்றி!.

மேலும் அட்டைப்படம், நூல்வடிவமைப்பு, அச்சீடு விநியோகம் என்பவற்றை மேற்கொள்ளும் வெள்ளி வெளியீட்டகத்தாருக்கும், 25 வாரங்களும் தங்கள் முகநூல்களில் பகிர்ந்த பல அன்பர் களுக்கும், வாழ்த்துப் பதிவுகளிட்ட ஆயிரக் கணக்கான இலக்கியப் பெரியார்கள், நண்பர்கள், மாணவர்களுக்கும், இப்பணியில் பல வழிகளிலும் பங்களித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்! வணக்கம்.

01. 09. 2021

அன்புடன்

**ச. வே. பஞ்சாட்சரம்**

இணுவில் கலை இலக்கியக் கழகம்

கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | இறை ஓம்பல் | 01 - 15 |
| 02. | தாயகம் ஓம்பல் | 16 - 28 |
| 03. | வாழ்வு ஓம்பல் | 29 - 44 |
| 04. | உண்மை ஓம்பல் | 45 - 57 |
| 05. | பின்னிணைப்புக் கட்டுரை | 58 - 80 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை ஓம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைக்கூ(க்) கவிதைச்
சிறுகூர்ப் பாக்கள்,ஐந்து
கைக்கோன் அருளால்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைக் கும்பிடுவோர்
ஏமாந்து ஒருவனையே கும்பிடுவர்!
எல்லாம் பெறுவர்! 01.

வாழ்வே மாயந்தான்!
ஆனால் சமூகம் நிரந்தரம்!
வளஞ்செய்வோம் வா! 02.

நேற்றைப் பாவங்கள்
நினைப்பில் இன்றைப் பாவங்கள்
தவிர்க்க மறப்பு! 03.

பழிப்பயன் தண்டனை!
தண்டனை பழிவகை காட்டும்!
காண்போன் உய்வான்! 04.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டால் அருட்பேறு!
அந்நேரம் பழிசெயல் தவிர்தல்
இன்னொரு பேறு! 05.

துன்பங்காள் நல்வரவு!
நிலைத்த இன்ப முத்தி
உங்களாலேதான்! 06.

யாகஊன் கனவுகள்
அடிநாவில்! வெறும் நுனிநாவில்
மந்திர முழக்கம்! 07.

நெய்ப் புகையால் மழை!
வேள்விப் பொய்த்துதிகளால்
பசுக் கொலைகள்! 08.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்பனவும் கசக்கும்!
என்றுமே கசக்காத ஒன்று
பக்தி இன்பந்தான்! 09.

நாத்திகன் சொல்லும்
"தன்னம்பிக்கை வெற்றிதரும்"
குருடன் வழிகாட்டல்! 10.

"சொல்லுவதற்கே நீதிகள்"
என்றோ, பிரசங்கிகள்சிலர்
நரி நடத்தையில்? 11.

உய்யும் வழி எது?
தன்பிழைதேடல்! பிறர்பிழை
தேடுதலே அன்று! 12.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணங்கள் கோடி!
வழிபடுபவை வாழ்கணங்கள்!
மற்றவை சாங்காலம்! 13.

வழிபாட்டில் முழுமை
தரவந்த கிரியைகள் மறைப்பில்
இன்று வழிபாடு! 14.

சிலைக்குப்பால் ஊற்றல்
திட்டுகிறான் பசுவையே தின்கிறான்,
மதக் கலப்பால்! 15.

கள்ளச் சாமியர்கள்
கண்டிக்கப் படட்டும், கடவுள்
நம்பிக்கை அழிக்காமல்! 16.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறன்மதம் பழிக்கிறான்
தன்மதம் திணிக்கப்போய்!
இதனால் சண்டைகள்! 17.

"சும்மா இரு சொல்லற!"
சொல்லப்பட்டது துறவிக்கே!
சோம்பேறிக்கில்லை! 18.

உச்சப் பழிப்பேறாய்,
முள்ளிவாய்க்கால் தமிழர்க்கு!
உலகுக்குக் கொறோனா! 19.

பால் மணச் சேயின்
குறுநகை, குதலை கடவுளின்
காவியங்களோ? 20.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின், குடி, மகிழ்எனும்
சிற்றின்ப வெறி தேய்ந்தே
பேரின்ப வேட்கை! 21.

தமிழரை வேரறுக்க
வேண்டியும் நடவாத போதும்
தொழுகிறான் பகை! 22.

தன்னையே கும்பிட்டுத்
தாழ்ந்த தமிழனுக்கோ இன்னும்
அகந்தை நாத்திகம்! 23.

அவள்மனம் வழுக்குமரம்!
ஆசை பாசங்கள் பொய் எனும்
ஞானப் பேறது! 24.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாடங் காய்ச்சிகள்
அன்றன்று பட்டினி வெல்வது
இறையை நம்பியே! 25.

காசுக்கே முதலிடம்
முதலிடும் தொழில் அதிபனுக்கு!
கடவுளும் பின்னேதான்! 26.

தவமுனிவர் மாவீரர்மேல்
பொழியோம் "நீயே கடவுள்!"
புகழ்ச்சி நெருப்பை! 27.

எந்நொடியில் என்றாலும்
என்னைஎடு உன்னடிக்கேல்
இன்ப இறைவா! 28.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்துயர் கண்டு
அழுவது பாவநாசம்! சிரிப்பது
பாவ ஈட்டம்! 29.

விதியையும் வெல்லலாம்
என்பதாலே தொழுகை, கோவில்கள்
இன்றும் உள்ளன! 30.

கடவுளின் ஞாபகம்
நம்புவோனை விட நாத்திகனுக்கு
அதிகம் வருகிறது! 31.

பனைமரமாய் நிற்போம்!
ஆட்டமுயல்வோன் ஆடுவதாய்
நம்பி உலையட்டும்! 32.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு இறந்தும் புகுவது
சொர்க்கமோ, நரகமோ மீண்டும்
பூமியோதான்! 33.

உலகைக் கெடுப்போர்
இறைதீர்ப்பும் நம்வீரமெனக்
காட்டும் நாத்திகர்! 34.

எங்கு பிறந்துள்ளீரோ!
பெற்ற தெய்வங்களே! காக்க
கடவுள் உங்களை! 35.

ஏழைக்கு இறையருளை
வேண்டி, பின்தான் ஈவோன்
மேலான வள்ளல்! 36.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் வரும் போது
விளிம்பிலும் மீளலாம் எனும்
நம்பிக்கை காப்போம். 37.

தண்டனைத் தலைவிதி
ஓதவிடாது இறை நாமம்
இடர்ப்போ தேனும்! 38.

விட்டிடின் பிரச்சினையை
'இறைவா நீயே தீர்'என்று,
விலகும் வேதனை! 39.

பழிப்பயன் தாக்கங்கள்
தடைப்படும், முன்னோடி ஓயா
வழிபாட்டினாலே! 40.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிருக்குள் வெண்ணெய்
தர மத்து! அறிவுக்குள் ஞானத்
தெளிவு தரக் குரு! 41.

வழிபாடு வாழ்விக்கும்
கேட்பது தந்தும், தீதேல்
வெறுக்க வைத்தும்! 42.

"என்றும் இன்பமாயிரு"
சொல்வோர் காதலன் காதலிக்கு!
சான்றோர் உலகுக்கு! 43.

மருத்துவருங் கைவிட்டோர்
வழிபாட்டால் மீண்ட செய்தி
எத்தனை ஆயிரமாய்! 44.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாளர், வள்ளல்கள்
மானுடப் பாலை வனங்கொள்
இன்பப் பசுந்தரைகள்! 45.

கேட்டதைத் தருவதல்ல,
கேட்ட, கேளாத நன்மைகள்
தருவதே கடவுள்! 46.

பகுத்தறிவுப் பசப்பலால்
பாழாகிறார், மூடர், மயங்கி
நாத்திகர்களாய்! 47.

"அப்படித் தொழாதே!,
இப்படித் தொழாதே!" எனும்நரிகள்!
எப்படியும் தொழலாம்! 48.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிப்பயனாம் இடர்களுக்கு,
தூயராய் வழிபடில் சேரும்
அதிசயத் தீர்வுகள்! 49.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம் ஓம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை அமிர்தமோ
ஏந்தும் தூய கரங்களில்
மட்டுமே சேரும்! 50.

வாழ்விக்கும் அறம் தவறி,
தந்திர அரசுகளின் வழியில்
அழிகிறது உலகம்! 51.

சர்வதேச மட்டத்தில்
தமிழ்பெறும் முதன்மை தரும்
தனிநல் நம்பிக்கை! 52.

ஆயிரம் தடைகள்
கடந்தோடியே நதிப்பெண்
சேர்கிறாள் இலக்கை! 53.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாக விதைகளால்
தேசம் நாளை! விதைகள்
லட்சமும் மீள்வர்! 54.

ஊர்வாழவே செத்தான்!
அவன் குழந்தை பட்டினியால்
ஊர் பார்க்கவே செத்தான்! 55.

பாதிநிலம் உறவினிடம்!
மீதிநிலம் படைமுகாம்! மக்கள்
நடுத்தெருவில்! 56.

ஆயிரம் பொய்யுறுதி!
அத்தனையும் வீணே இன்று!
நாடே அன்னியனிடம்! 57.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினப் படுகொலை
அரசுகளைத் தெரிந்துவிடுகின்ற
மக்களும் கொலைஞர்! 58.

அன்று ஒட்டுக் குழுக்கள்!
இன்று தலைவராய் வந்தொட்டும்
புளிமாங் கொப்புகள்! 59.

மேற்கில் மறைந்து
கிழக்கில் உதிக்கும் சூரியன்கள்
நாளைய புலத்தமிழர்! 60.

ஆக்குவது அமிர்தமாய்!
உண்பது நஞ்சுமாய்! மானுடர்
அறிவியற் சமையல்! 61.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்பம், கொட்டாவி
இணைந்துவரா ஒருபோதும்,
இருதமிழர் போன்றே! 62.

ஆங்கிலம் படிப்போம்,
வெள்ளை மாப்பிள்ளை விட்டால்
பேரரைக் கொஞ்ச! 63.

காற்றுப் பரம்பல்கள்
ஈழத்தமிழ் விதைகளுக்கும்,
விமானங்கள் மூலம்! 64.

இலங்கை அரசுநீதி
இனக் கொலைஞர்களுக்கே
விருதும், மன்னிப்பும்! 65.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர் விசாரணைத்
தீர்ப்பிலும் ஐ. நா. தணிக்கை!
இது உலகின் நீதி! 66.

தலைமைப் பதவி!
தக்கோர் அதற்கு அணி!
தற்குறிகள் அதன் பிணி! 67.

புலம்வாழ் தமிழ்ச்சிலரும்
சுதேசிமர வேர்களாகவே
மாறி விடுகிறார்கள்! 68.

ஈழத்தான் உலகெங்கும்!
எனினும் நாற்று மேடை
இன்றும் பயிருடன்! 69.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையாண்மைக் கவசம்
தடையா இனக்கொலை மீதாம்
ஐ. நா. விசாரணைக்கும்? 70.

தொட்டாற் சுருங்கி
இலைமட்டுமே! முள்ளோ குத்தும்
மிதிக்கப் போனால்! 71.

தேர்தல் காலம்மட்டும்
மக்களை நாடும் தலைவன்
வேடந்தாங்கல் பறவை! 72.

தேயும், ஆனால் அழியா,
நிலவும் தமிழினமும், தாக்கும்
புயல், இடி நடுவும்! 73.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்போர்க் காலம்
பிறந்த சேய்களே அறங்காக்க
ஆயுதமும் ஏந்தினர்! 74.

நான்கு தலைமுறை
அழிக்கப்பட்ட கொலைக்களம்
முள்ளி வாய்க்கால்! 75.

அன்றுஈழத் தேசியம்,
இன்று ஸ்ரீலங்காத் தேசியம்
பச்சோந்திகளுக்கு! 76.

மதவெறி முலையூட்டி!
தமிழினத் தொண்டுப் பறவை!
வெளவால்கள் சில! 77.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடை அறுகம்புல்
வேர்கள் மண்ணுள் ஒய்வு -
காத்திருப்பு மாரிக்காய்! 78.

செங்கம்பளம் முப்பது
கொலை நாடுகளுக்கு, நம்
முல்லைக் குருதியில்! 79.

மொய்த்தெமைக் குட்டியோர்
மொய்த்துக் குட்டப் படுகிறார்
கொறோனாவால்தான்! 80.

பன்றிக்குப் பால் தந்த
சிவன்தருக இனங்காண, நம்
நரிகளுக்கும் வால்! 81.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையும் முளைக்கும்
சதைகரைச்சான், உலகில்
யூதர் எனும் இனம்! 82.

பச்சைமண் பயிர்வாழ!
சுட்ட சுடுமண் தகடுகள்
வரலாறு வாழ! 83.

அனேக ஞாபகங்கள்
வலியே தருவன இன்றும்
ஈழத் தமிழனுக்கு! 84.

செய்யத் தவறிடும்
இனக்கடமைகள் அழவைக்கும்
வேரறும் நாளில்! 85.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன அடையாளங்கள்
மீட்பிலும் அழிகின்றன! மண்மீள
மீளும் எல்லாம்! 86.

மக்களைக் கொல்லும்
கிருமியிற் கொடிய மாந்தர்க்கும்
தேடுங்கள் நாசினிகள்! 87.

வளர்விக்கும் வேர்கள்
மண்ணுள் உழலும்! வளரும்
மரமே மேல்நோக்கி! 88.

மனிதர்கள் காணாமல்
ஆக்கப் படலாம்! அறமுமா
காணாமற் போய்விடும்? 89.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்குச் சொத்துக்
குவிக்கப்பலர், அதை நாட்டுக்கு,
ஈந்தோரும் பலர்! 90.

நாட்டுக்கு உழைப்போரைத்
தன்வீட்டுக்கே ஆக்க
நிற்பன் தன்னலமி! 91.

கோடி நெஞ்சங்களின்
ஏக்கம் ஏந்திப் பறந்து
வீழ்ந்தவன் மாவீரன்! 92.

அம்மாவின் பிள்ளையும்,
அப்பாவின் பிள்ளையும் சண்டை,
மாறு, மாறு மணங்களால்! 93.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தமிழ்வளர்த்த
சேரன் இன்று வேர்வெட்டிக்
கொல்லுஞ் சோரன்! 94.

எலியைப் பிடிக்க
மலையைக் கல்லினர்! இருந்தும்
தப்பிவிட்டதாம் எலிப்புலி! 95.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வு ஓம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகிறேன் ஹைக்கூவும்,
வாசிப்போர் தொகை பெருக்கி,
வளர்விக்கத் தமிழை! 96.

கத்தரிகோல் அலகுகள்
கணவன், மனைவி வாழ்வில்
வரும்இடர் கத்தரிக்க! 97.

"விட்டுக் கொடு" அன்று!
"வேறு வீட்டுக்கு ஓடு" இன்று!
படிதாண்டும் தமிழினம்! 98.

தமிழர் நம்பிக்கை:
ஒருபெண் தாயாகும் நாளில்
தெய்வமும் ஆகிறாள்! 99.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபதுவரை ஊழியம்
அரச உத்தியோகத்தர்கள்!
மற்றோர் ஆயுள்வரை! 100.

அழுதுருகிப் பிரசங்கம்!
வேண்டா நல்லார் வேர்கொல்
வெறிகள் அடிநெஞ்சில்! 101.

நாளை வேள்விப்பலி!
இன்று சேவல்கள் சண்டை
தலைமை நாட்ட! 102.

சேய்கள் உறக்கம்!
பெற்றவர் விழிப்பில், நாளைச்
சேய்கள் பசியஞ்சி! 103.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளைகள் பாவம்" என்றே
முதியோரில்ல மனங்களும்
மௌன அழுகை! 104.

போலிப் பிரசங்கியின்
வரலாற்றுப் பிரசங்கம், புகுத்தவே
புரட்டு வரலாறுகள்! 105.

ஆயிரம் தவிப்புகள்
பிள்ளைகள் வளர்க்க, மூத்த
பெற்றோரைப் பேண! 106.

படிப்பறிவால் சான்றிதழ்!
பட்டறிவாலே வாழ்வுநெறி!
தேவை இரண்டுமே! 107.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளமைப் பிழைக்காய்
இரங்கும் இடைவயது! வாழ்வே
பாழென்னும் கிழவயது! 108.

இளமையில் வறுமை!
இன்று காசிருந்தும் நீரிழிவு!
அந்தோ பலாப்பழமே! 109.

புகழ்வெறி மூடரின்
உலுத்தத் தலையீடுகளால்
பள்ளிகள் போர்க்களம்! 110.

"படியுங்கள் நூல்கள்!"
பறக்கிறது பதாகை! அதைக்கூடப்
படிப்போர் இல்லையே! 111.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சவிலையில் கொட்டாவி!
மலிந்தநேரம் கொட்டிச் சிந்தல்!
சிக்கனம் பேணாமை! 112.

மகன்படிக்கச் சென். யோன்ஸ்,
அப்பா உரிமைப் போரில்கெட
ஏழைசேய் ஊர்ப்பள்ளி! 113.

கடற்கரைச் சனக்கூட்டம்,
காற்றுவாங்க மாலையில்,
மீனுக்குக் காலையில்! 114.

அற்புத இசையாற்றல்!
பாடி மகிழ்ந்து கவலைகள்
மறக்கும் ஏழைகள்! 115.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய இரசனைகள்,
கொப்புத் தாவல்கள் மலிந்து,
குடும்பங்கள் நாசம்! 116.

உச்சிவானில் பருந்து!
உள்ளமோ மண்ணில் ஊன்மேல்!
பெரியோர்கள் சிலர்! 117.

இடுவது ஒரு முட்டை!
கொக்கரிப்புக்கள் கோடிதரம்!
தற்புகழ்ச்சிக் கோழிகள்! 118.

“நேரம் போதவில்லை”
தொண்டன்! “நேரம் போகவில்லை”
தூங்கு மூஞ்சிகள்! 119.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிமன்ற வெற்றி
அதிகக் கருத்துகளுக்கே!
உண்மை கண்டல்ல! 120.

முதுமையில் நம்சாவு
பிந்தப் பிந்த இழவோலைகள்
வந்து வந்து வாட்டும்! 121.

குளங்களை மூடிமூடிக்
கோட்டைகள்! அவற்றுள் நாளை
பட்டினிச் சாவுகள்! 122.

பிறரிடம் கை நீட்டுவோன்
ஏழை! பிறர்க்குக் கைநீட்டுவோன்
பணத் திமிரன்! 123.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கிடும் தேவைகள்
பெருக்கக் கவலைகள், ஓடும்,
பறக்கும் மனிதர்கள்! 124.

காய் பாரமில்லைக்
கொடிக்கு! ஆனால் கொடிகள்
பாரமாம் காய்களுக்கு! 125.

சேறே இனிப்புப் பன்றிக்கு!
இழிந்த சுகங்கள் இனிப்புக்
கயவர்களுக்கு! 126.

சுமக்கக் கழுதை,
இழுக்க எருது, ஓடப் பரி
மனிதர்களுக்காக! 127.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊணன் வளர்க்கும்
ஊளைத் தசையும் தூண்டுவது
ஊத்தை நடத்தையை! 128.

தரணியோர் தலைமேலான்
தன்தலை தாழ்வோன்! புகழ்வோன்
தன்காலின் கீழுமே! 129.

நல்லோர் நெஞ்சங்கள்
தம்துயர் மறக்கின்றன, பிறரின்
துயர்கண்டழுவதில்! 130.

ஒப்பாரிப் பாடல்கள்
அன்று இறந்தவர்க்கு மட்டுமல்ல,
என்றோ இறந்தார்க்குமே! 131.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன்மேல் பொறாமை
கொள்ளல் ஒப்புக்கொள்ளலே
நாம் குறைந் தோரென! 132.

சாதனைப் பட்டியலின்
நீளமே வாழ்வின் நீளம்! அன்றி
ஆண்டுகளின் அல்ல! 133.

காலையில் விழித்ததும்
எழும்பத் தவறின், கவலைகள்
மொய்க்கும் எம்நெஞ்சை! 134.

பிள்ளைகள் பெயர்களே
பைத்தியம் பிடித்த நிலையிலும்
பெற்றதாய் நாவில்! 135.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காக்கப் போய்
ஓர் அபலையை, இன்று ஐந்து
அபலைகளின் தந்தை! 136.

பொட்டுடன் பாட்டி
முன்னே, பாட்டன் பின்னே
போய்விடல் புண்ணியம்! 137.

இவர்களும் தெய்வங்கள்!
மற்றோரைக் காக்கச் சாகும்
மருத்துவத் தொண்டர்கள்! 138.

நாம் இடர்படும்போது
"ஆ என்ன செய்வாயோ?" என்று
தளர்விப்பன் உட்பகை! 139.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்க மருந்துகள்
ஊக்கத்தைக் கடனெடுப்பித்து,
பின்னர் சோர்விக்கும்! 140.

நம்பும்படி ஊட்டிவந்து,
நம்பிவரப் பிடித்து வெட்டல்
மிகக் கொடிய சேய்க்கொலை! 141.

ஒட்டை தைப்பதற்கு
ஒட்டை ஊசி! நொந்தோர்க்கு
உதவவும் நொந்தவரே! 142.

"என் உச்சப் படைப்பு
இனிமேல்த்தான்" என்றுழைப்பான்
உண்மைப் படைப்பாளி! 143.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த நூலில் பிழையுண்டு"
நூல் குப்பைக்குப் போகப் போதும்
இந்த ஒரு கூற்றே! 144.

தன்னைக் காப்போன்
மருத்துவரை, பிறரைக் காத்து,
வெல்வான் கொறோனா! 145.

அடிமனதின் அவாவோ
அடுத்தவர் அழுகை காண,
அநேக மானோர்க்கு! 146.

தண்ணீர் குடிப்போம்!
அதில் நஞ்சேற்றித் "தண்ணி"
என்றும் அடிப்பார்கள்! 147.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், சுகம், சொத்துப்
பார்த்து மணங்கள்! பின்னர்
இழந்தால் பிரிவோமா? 148.

கௌரவம், சொத்துகள்
காக்கச் சந்ததி முடக்கும்
மரபுவாதிகள் பலர்! 149.

பிழைகளை எண்ணலிலும்
சரிகளை எண்ணுதல் எளிது
அந்தச் சஞ்சிகையில்! 150.

நன்னீர்ப் பாறைகள்
உருகியோடி, உப்புக்கடலோங்கி
விழுங்கும் நாடுகளை! 151.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு துறைப் புகழாளன்
அறியாத் துறைகளையும் ஆள
நிற்றல் அழிவுக்கே! 152.

அடங்கி அடைத்தோம்
ஓசோன் ஓட்டையை! முற்றாய்
அடங்கினே முழுமீட்சி! 153.

உன்னில் தனைக்காணும்
உண்மை அன்பனே உன்மேல்
எரிச்சல் படமாட்டான்! 154.

உலக அரசுகளில்
ஈழ இனக்கொலைக் கண்டனங்கள்!
மீட்சியின் தொடக்கம்! 155.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மை ஓம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வழி தேடுகிறோம்
இரண்டு, மூன்று, நாலு
கால்களில் ஓடியும்! 156.

ஆட்காட்டி அலறுகிறது
மனிதரைக் கண்டால் மட்டும்!
ஆண்டவன் குரல்தான்! 157.

கன்று மடியில்முட்டவும்
பசு மேலும் பாலைச் சுரக்கிறது!
இதுதான் தாய்மையோ? 158.

ஒற்றைக் காலில்
தவம் கொக்கு! அன்றாட மீன்இரை
அதன் முத்திப்பேறு! 159.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுமண் தகடு
என்றுமே இளகாது! மனிதமனம்
சுட்டும் இறுகாது! 160.

பிள்ளையின் பிறந்த
முதல் அழுகையில் மட்டுமே
அன்னை சிரிப்பாள்! 161.

புற்கள் கருகலாம்
வெப்பம் துறந்து விட்ட
பனிக்கடுங் குளிரிலும்! 162.

இருவர் இன்பத்தில்
ஒருவன் பிறப்பான், சுமக்க
முழுவாழ்நாள் துன்பம்! 163.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், கடல் உயிர்கள்
பலி மனிதனுக்கு! மனிதன் பலி
நுண்ணுயிர் வகைக்கு! 164.

மின்மினி வெளிச்சங்கள்
வெண்ணிலவின் பறக்கும்
வியர்வைத் துளிகளோ? 165.

நிலவின் கறைகள்
ஒளியில் இல்லை! இப்படியே
கலைஞனும், கலையும்! 166.

வண்டுகளுக்குத் தேன்,
பூவுக்கும் மகரந்தச் சேர்க்கை,
தாகங்கள் உந்தியே! 167.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகம்புல் வேர்கள்
பருவம், காலம் கடந்தவை
பக்தி நெறிபோல! 168.

உணவுப் பயிர்வளர
உழைப்பதில் மனிதன் பாதி,
இயற்கை பாதி! 169.

இஞ்சியும், மரவள்ளியும்!
இரண்டும் நல்லவை தனித்தனி!
இணைந்தாலோ நஞ்சு! 170.

உன்சேய்க்கு ஒன்றும்,
பிறன்சேய்க்கு வேறும் கொடுத்தால்
அழிவது உன்சேயும்! 171.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் வெய்யில்,
கதிரவன் காலையும், மாலையும்
பரப்பிவரும் மங்கலம்! 172.

மனிதப் பிறப்புகள்
ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைச்செய்
குறியாகத்தானோ? 173.

பேச்சோ, செயலோ
எண்ணம் வடிவில் முதலில்
பிறப்பது நெஞ்சில்த்தான்! 174.

முள்ளையும், பூவையும்
சமமாய் ஊட்டுவது செடி
என்னும் அன்னையும்! 175.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வெட்டும் மனிதன்!
ஆயினும் மரம் விதை தூவும்
அவனைக் காக்கவும்! 176.

உயிர் பிரியும் வரையும்
உறுதுணை ஒருவருக்கு அவரின்
சொந்த உடல்நலமே! 177.

தேங்க, நீர் நாறும்!
தேங்கிடச் சிந்தனை, மனிதன்
வாழ்வு நாறிடும்! 178.

சிந்தனை ஊற்றைத்
திறப்பதே கல்வி! கிளிப்பிள்ளைப்
பாடங்கள் வீணே! 179.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லார்க்கும் கல்வி
தகர்க்கும் வேற்றுமைச் சுவர்களை!
மானிடம் நிமிரும்! 180.

உடற்பூ மலர்ந்து,
நுகர்ந்து, மடிந்திடும்! உயிர்ப்பூ
போய்வரும் திரும்பவும்! 181.

பிறப்பில் அழுவோர்
இருவர் - தாய், சேய்! இறப்பில்?
இறப்பவரைப் பொறுத்து! 182.

வட்டுகளின் மடியில்
வாழைகள்! வாழைகள் மடியில்
நாளைய பழங்கள்! 183.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேச்சுக்கு அர்த்தங்கள்
சொல்லளவே! மௌனத்துக்கோ,
ஆழக் கடலளவில்! 184.

கனவின் அதிர்வுகளும்
நனவிலும் அதிகங் குறைந்தவை
அல்ல அன்றோ? 185.

ஆல் ஆகாது நாணல்!
நாணல் ஆகாது ஆல்! இவைகள்
மரபணு வார்ப்புகள்! 186.

உண்ணும் உணவு
உடலை, செய்தொழில் மனப்பாங்கை
வனைவன நமக்கு! 187.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைக் காற்றில்
களித்தும், கனன்றும் மிதக்கும்
பஞ்சே கவிநெஞ்சம்! 188.

ஆசைகள் தொடர்கதை!
ஒன்று தீர மற்றது எழும்!
தவிக்கும் வாழ்க்கை! 189.

புகழ்ச்சியால் பூக்கும்
அகந்தையும், இகழ்ச்சியில் துயரும்
கொன்றிடும் ஊக்கத்தை! 190.

ஐம்பூதங்களின் உலகம்!
குழப்புவன ஐந்து புலன்கள்
அல்ல! ஆறாவதே! 191.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுவீதம் இல்லை
எதிலும்! உச்சமாய் இயல்வதே
நூறு விழுக்காடு! 192.

ஆடுகள், மாடுகள்
அதிகம் பெருக்கி மகிழும்
மனிதம்! தான் மட்டும்..? 193.

ஒருவர்க்கு உதவப்போய்
உதைபட்டு நொந்த போதும்
பூரிக்கும் உள்ளமோ! 194.

எதிரிக்கும் உதவலும்,
ஏழைக்குக் கொடை போன்று
தருவது இன்பமே! 195.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கு இல்லை
ஆண், பெண், சாதி, தேச,
இன, மத எல்லைகள்! 196.

தனக்காகத் தண்டுதல்
அவமானம்! பிறர்க்காய்த் தண்டல்
தருமிங்கும் வானம்! 197.

அழுதே கிடப்பவன்
நாளும் ஒருகாரணம் தேடுவான்,
அன்றும் அழுவதற்கு! 198.

சாவினை எண்ணி
அஞ்சுங்கணம் ஒவ்வொன்றும்கூட
நாம் சாங் கணந்தான்! 199.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டாற் சுருங்கி செடி!
தொட்டுச் சீண்டப் பொங்கிப்
பாடுவோன் கவிஞன்! 200.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்னிணைப்புக் கட்டுரை

# எழுச்சி தரட்டும் எழுதுகோல்கள்!

## 1) அறிவின் அடித்தளம்

கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் சுவைத்தும், மூக்கால் மணந்தும், மெய்யால் தொட்டும் உயிரினங்கள் பட்டறிந்து, அனுபவித்துப் பெறும் பட்டறிவே அவற்றின் பின்னைய சிந்தனைக்கு மூலமானதாகவும், சகல அறிவுகளுக்கும் பிறப்பிட மாகவும், அடித்தளமாகவும் அமைகிறது என்பது உலகம் ஒப்புக்கொண்ட உண்மையாகும். இதனாலே, மெய், வாய், கண், மூக்கு, செவி மூல அறிவு மட்டும் உடைய உயிரினங்களை ஐந்தறிவுப் பிராணிகள் என்றும், மேலதிகமாகச் சிந்தனை அறிவும் உடைய மனிதனை ஆறறிவுப் பிராணி என்றும் கொள்கின்றோம்.

“சூடு கண்ட பூனை அடுப்பங்கரை சேராது” என்பது ஐயறிவு உயிர்கள் பாடுகள் - அனுபவங்கள் மூலம் அறிவைப் பெறுகின்றன என்பதற்குச் சாட்சியாகும் பழமொழி! “பட்டறி! கெட்டறி! பத்தெட்டு இறுத்தறி!” என்பது ஆறறிவு மனிதனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சந்திக்கும் பாடுகள், அனுபவங்கள் மூலம் சிந்தித்து அறிவை ஈட்டுகிறான் என்பதை வலியுறுத்தும் பழமொழியாகும்.

ஆனால் இந்த அறிவுகளை - ஞானத்தை தன் சொந்த அனுபவத்தின் மூலம் மட்டும் அவன் பெறவில்லை. தான் குழந்தையாக இருக்கும் பருவத்தில், பெற்ற சொந்த அனுபவ அறிவோடு, தன் பெற்றார், ஆசிரியர்மார், முதலியோர் தத்தம் பட்டறிவுகள் மூலம் ஈட்டிய ஞானத்தை அவர்கள் கூறும் புத்திமதிகள், அறிவுரை, வழி நடத்தல்கள் வடிவில் வரும் அறிவையும் அவன் ஈட்டுகிறான். அவன் சிந்திக்கும் திறன் விருத்தி பெற்ற பிள்ளை, குமரப்பருவங்களில் சொந்த அனுபவங்கள் மூலமும், நூற்கல்வி மூலமும் பெரும்பாலும் அறிவை ஈட்டுகிறான். மேலும் தனிமனித அனுபவங்கள் மட்டுமன்றி, மனிதத் தலைமுறைகள் தொடர்ச்சியாகப் பட்டறிந்த அனுபவப் பிழிவுகளின் வடிவங்களாக அமைந்த பழமொழிகள், தீவிரசிந்தனையாளர்கள், அனுபூதி மான்கள் வடித்துத்தரும் நீதிமொழிகள் என்பனவும் அவனது அறிவுப்பெருக்கத்துக்கும், அழுத்தமான நம்பிக்கைகள், தெளிந்த மனப் பாங்குகள் உருவாக்கத்துக்கும் ஆழமான பங்களிப்பைச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சமூக அறிவூட்டற் பணியாளர்கள் வரிசையிலே, இலக்கியப் படைப்பாளிகளும் இடம்பெறுகின்றனர். தனிமனிதன் ஒவ்வொருவனது வாழ்விலும் அன்றாடம் வழமையாகவும், புதிது, புதிதாகவும் நிகழ்ச்சிகள், மகிழ்ச்சி, துயரம், இகழ்ச்சி,அச்சம் போன்ற உணர்ச்சிகளில் ஒன்றினதோ, பலவற்றினதோ வெளிப்பாட்டுடனோ, இன்றியோ இடம் பெறவே செய்கின்றன. இந்நிகழ்ச்சி ஒவ்வொன்றைப்பற்றியும், இதற்குக் காரணம் என்ன? இதன் விளைவு என்ன? எதிர் விளைவு என்ன? என்று எல்லோருமே நிதான மாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அதனால் அந்த நிகழ்ச்சிகள் மூலம் பெறவேண்டிய அறிவை ஈட்டிக்கொள்ளத் தவறிவிடுகிறோம்.

ஆனால் இத்தகையோரிடமிருந்து வேறுபட்ட போக்குடைய ஒரு சிலர், தாம் சந்திக்கும் ஒவ்வொரு புதிய நிகழ்ச்சி பற்றியும் ஆழமாக அடிவரை ஆராய்ந்து உண்மை முத்துக்களைத் திரட்டிக் கொள்கிறார்கள். அரியவர்களான அந்த வகையினருள்ளும் ஒரு சிலரே "யாம் பெற்ற அறிவை இந்த வையகமும் பெற்று நன்மைப்பட வேண்டும்" என்னும் மானுட நேய இலட்சிய உந்தல் பெறுகிறார்கள். அவர்கள் அந்த உண்மைகள், படிப்பினைகள் பொதிந்த கவிதைகளாகவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளாகவோ, நாடகங்களாகவோ இலக்கியங் களைப்படைத்துச் சமூகத்தில் உலா வர விடுகிறார்கள். அந்த ஆக்கங்களுக்கு இன்ப, துன்ப, ஆவேச, வெறுப்பு உணர்ச்சிகளை இடத்திற் கேற்பப் புகுத்தியும், உவமை, உருவகம், குறியீடு போன்ற அணிகளைக் கையாண்டும் சுவையூட்டுகிறார்கள், அதன் மூலம் மனித அறிவு, உணர்வு மேம்பாடுகளை வலுப்படுத்துகிறார்கள். இப்பணியினூடு சமூகத்தையும், தனிமனிதரையும் வாழ்வில் தக்க செல்நெறி தழுவிக் கொள்ள உதவுகிறார்கள்.

**2) வயதுப் பருவங்களும், இலக்கியங்களும்!**

குழந்தைகள், சிறார்களை நாளைய மன்னர் களாக்க, குறைந்த பட்சம் இதயம் படைத்த மனிதர்களாக ஆக்க வேண்டிய பொறுப்பு மூத்த தலைமுறைத் தந்தை, தாயர், ஆசான்மார் சமூகத்தின் கைகளில், குறிப்பாக எழுத்தாளர்கள் கைகளில் உள்ளது.

இளம் நெஞ்சங்களில் ஆழ வேரூன்றி அவ் விளையோர் வாழ்நாள்களை வளமாக்கக் கட்டாயம் தேவைப்படும் நல்ல நம்பிக்கைகளையும், ஒழுக்கத் தியானத்தையும், உணர்ச்சிகள், இரசனைகள், நல்மனச்சார்புகளையும், பிஞ்சுகளுக்கு இயல்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிதரும் ஆடல், பாடல்கள், விளையாட்டு களினூடு மறைமுகமாக விதைத்து வளர்க்கும் குழந்தை இலக்கியங்களே ஒரு சமூகத்தின் முளைகளுக்கு எருவிடும், நீர் பாய்ச்சும் முதன்மை இலக்கியங்கள் எனலாம்.

அடுத்து, குமரப்பருவத்தவர்க்கான இலக்கி யங்கள்! குழந்தைப்பருவத்தவர்க்கான இலக்கி யங்கள் குழந்தைகளல்லாத மூத்தவர்களால் படைக் கப்படும்போது, இந்தக்குமரப் பருவத்தவர்க்கான இலக்கியங்களோ பெரும்பாலும் அப்பருவ எழுத் தாளர்களாலேயே எழுதப்படுகின்றன.

குழந்தை, பிள்ளைப் பருவங்களில் ஒழுக்க நெறிகளை அறிந்து, ஒழுகப்பழகி நெறிப்பட்டுக் குமரப்பருவத்துள் புகும் இளையோர் அங்கு உடலமைப்பில் அவர்கள் பெறும் பெருமாற்றத்தால் ஆற்றல்களின் பெருக்கமும், கற்பனைகள், கனவுகள், ஆசைகளின் அதிக பெருக்கமும் உந்த, உலுக்கப்படுகிறார்கள். அவற்றால் தடுமாறியும், அடக்க வரம்பு உடையாதவர்கள் அவற்றை ஆக்கச் செயல்களில் மடைமாற்றிச் சாதனைகள் புரிகிறார்கள். வயது மாற்றங்களால் ஒழுக்க வரம்புகளை மீறிய இளையோர் இடர்களுக்குள் சிக்கி, அல்லல்களுள் மாண்டுவிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விருவகைக் குமரப்பருவத்தார் பற்றியும், அவர்தம் கற்பியலில் நிறைவுறுகின்ற பண்பு தவறாத காதல்கள் பற்றியும் இலக்கியங்கள் பட்டறிந்த அந்தப் பருவத்துப் படைப்பாளிகளால் பெரும்பான்மையும், மூத்த எழுத்தாளர்களால் சிறுபான்மையும் படைக்கப்படுகின்றன.

அடுத்து, இல்லறப் பருவத்தார் இலக்கியங்கள்! பொறுப்புகள், கடமைகள், சந்ததி சந்ததியாகத் தொடரும் கடப்பாடுகள் மயமாகத் தள்ளாடும் இல்லறம் பற்றியும், குழந்தைகளின் பராமரிப்பு, கல்வித் தேவைகள் உறவினர், விருந்தாளிகள், கோவிற்பரம்பரை உபயங்கள், கடன் பிணக்குகள், தொழில் வருவாய் ஏற்ற, இறக்கங்கள் பற்றியும் நடப்பியல் அனுபவங்கள் வெளிப்படும்படி தேர்ந்த மூத்த படைப்பாளிகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் என்று தாராளமாக எழுதுகிறார்கள்.

அடுத்து, மூப்புப்பருவ இலக்கியங்கள் ஓய்வொழிச்சல், உறக்கம் இழந்த உக்கிர இல்லற வாழ்வுப் போராட்டத்தைச் சமாளித்து, பிள்ளை களைக் கரைசேர்த்துக் களைத்துச் சலித்த நிலையில், “போதுமடா சாமி” என்ற ஞானம் பெற்று, இனியும் பிறவாமை வேண்டிக் கோவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளமென்று அலையத் தொடங்கியுள்ளோர் பற்றி அவர்களும், பிறரும் படைக்கும் இலக்கியங்கள் ஒருவகை! அவ்வாறு பட்டுங் கெட்டுந் திருந்தாமல், பாச வலைகளிலிருந்து மீளாமல், பிள்ளைகளிடம் உரிமைப்போர் நடத்தியோ, பேரப்பிள்ளைகளுக்கும் சொத்துச்சேர்க்க மூன்று கால்களில் ஓடியோ உழலும் ஏராளம் மூத்தோர், பற்றுப்பாசம் தேயாமல், பாவம் பழிச்செயல்களிலிருந்து ஓயப்பெறாமல் தொடர்ந்தும் பிறவிகளுள் மாண்டுழலும் போக்கில் அழியும் ஏராளம் மூத்தோர் பற்றித் தோன்றும் இலக்கியங்கள் இன்னொரு வகை!

**3) சமூகம் பற்றிய இலக்கியங்கள்!**

மேற்கண்ட தனிமனிதவாழ்வு பற்றிய இலக்கியங்கள் போல, மறுபுறம் சமூக வாழ்வு பற்றிய அவ்வக்காலச் சமூகப் பிரச்சினைகளில் மையங்கொண்ட இலக்கியங்களும், பரப்புரைப் பண்புடன் சமூக அக்கறை கொண்டவர்களால் எல்லாச் சமூகங்களிலும் படைக்கப்பட்டு வருகின்றன.

சாதி ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டங்கள் பற்றி, மத ஊடுருவல்கள், நிந்தைகளுக்கெதிரான போராட்டங்கள் பற்றி, சீதனக்கொடுமை, தனி யுடைமை, முதலாளி தொழிலாளி முரண்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி, மூட நம்பிக்கைகளுக் கெதிரான சீர் திருத்தங்கள் பற்றி, இன ஒடுக்குமுறைகள், நில ஆக்கிரமிப்புக்களுகெதிரான போராட்டங்களை மையப்படுத்தி, சமூக ஆர்வலர்கள், நீதிமான்களால் இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தோற்றம் பெறும் இலக்கியங்களுள் தனிமனிதத் தேவைகளை நிறைவேற்றல், சிக்கல்களுக்குத் தீர்வு காணல் முதலியவற்றுக்கு வழிகாட்டும் படைப்புகள் என்பன விருப்பு, வெறுப்புகளைக் கடந்த நடுநிலையில் நின்று எழுதப்பட்டவையாக அமைந்து விடுவதுமுண்டு. அவ்வாறன்றி விருப்பு, வெறுப்புகளால் உந்தப்பட்ட மனநிலையிலிருந்து, அறந்தவறிய குதர்க்கங்களாக அமைந்து, சமூகத்தீங்கு புரிந்துவிடுவதுமுண்டு. இவற்றுள் அறநெறி தழுவிய படைப்புகள் மட்டுமே தனிமனிதர்களுக்கும் அதனூடு, சமூகத்துக்கும் நன்மை பயக்கின்றன.

இது போலவே ஒடுக்கப்படும் ஒரு சிறுபான்மை இனத்தின் விடுதலைப் போராட்டம் போன்ற ஒரு சமூகப்பிரச்சினையிலும் எழுத்தாளன் வலியுறத்தும் தீர்ப்பும் மேலாதிக்க சக்தியின் அச்சுறுத்தலுக்கஞ்சி வளைந்து கொடுத்தோ, அறத்துக்கோ, நீதிக்கோ எதிரானதாகவோ, அமையாமை கட்டாயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சான்றின்படி உண்மையைச் சொல்லத் தடைகள், அச்சுறுத்தல்கள் இருந்தால் அவற்றை எதிர்கொண்டு எழுதும் துணிச்சல் எழுத்தாளனிடம் இல்லை என்றால், மொத்தத்தில் அந்தச் சந்தர்ப்பத்தில் எதுவும் எழுதாது விட்டுவிடுவதே முறையாகும். அதைவிட்டு எழுதாமல் இருக்க முடியவில்லை என்ற சாட்டில், அறந்தவறி எழுதிப் புகழ், பொருள் தேடும் பிரம்மாக்கள் அந்தச் சமூகத்தின் சாபக்கேடுகளாகவே பிற்கால வரலாற்று ஏடுகளில் பொறிக்கப்படுவார்கள்.

மேற்கூறிய தனிமனிதர், சமூகம் பற்றிய இலக்கியங்கள் காலங்காலமாகச் சமூகத் தலை முறைகள் பட்டறிந்து, தெளிந்த பேருண்மைகள், சித்தாந்தங்கள், நம்பிக்கைகள் எனப்படும் சமூக விழுமியங்களுக்கு ஊறு விளைவிக்காத வகையில் சமூகப் பொறுப்புணர்ச்சி பேணிச் செம்மை கொண்டமையும்போதே அவை தொடரும் தலை முறைகளுக்கும் பயன்மிக்கவையாய் மக்களால் மதித்து வரவேற்கப்பட்டுப் பேணிக்காக்கப் பெறவும் முடியும்.

### 4) எழுத்தில் ஏற்புடைய வழக்க மீறல்கள்

அதற்காகக் காலச்சூழ்நிலைக்கேற்ப மேற் கொள்ளப்பட்டு வந்த அன்றாடச் சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கங்களும் மரபுகளாகக் கருதப்பட்டு, பின்னான பொருளாதார, தொழில் ரீதியான, சம்பிரதாய சம்பந்தமான மாற்றங்களைச் சமூகம் தழுவிக்கொள்ள நேரும்போது, அந்த உடைப்புகளையும் மறுதலித்து இலக்கியம் படைப்பதும் வரவேற்கத் தக்கதன்று. அச்செயல், ஒன்றில் சமூகத்தைப் பின்னடைய வைக்கும். அன்றேல் எழுத்தாளர்களின் எழுத்தைச் செல்வாக்கிழக்கச் செய்யும். உதாரணமாக நமது பெண்கள் இல்லத்தரசிகளாக வீட்டுள் மட்டும் கட்டுண்டு வாழ்ந்த நிலையை மீறி, பெண்ணும் வெளியில் இறங்கிச் சம்பாதித்தால் மட்டுமே வீட்டுப் பொருண்மிய நிலையைத் தக்க வைக்க முடியும், நேரக்கஞ்சி குடிக்க முடியும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு, பெண்கள் வேலைக்குச் செல்லும் வழக்கம் வலுப்பெற்று வரும் நிலையில், அந்த வழக்காற்று மாற்றத்தை மறுதலிக்காமல் அனுசரித்து இலக்கியங்கள் படைப்பதே காலத்துக்கேற்றதும் நன்மை பயப்பதுமான இலக்கியச் செல்நெறியாகும்.

இன்று தாயக ஈழம் விட்டு, உலக நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இலட்சக் கணக்கான தமிழ்க் குடும்பங்களில் பெண்களும் அன்றாடம் தொழிற்சாலைகளில் பணிபுரியச் செல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாத பெருவழக்காகியுள்ளது. இந்த வாழ்வியல் மாற்றத்தை அனுசரித்தும், இந்தப் புதிய சூழ்நிலையில் அவர்கள் முகங்கொடுக்க நேரும் சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவும் விதத்திலுமே புலத்துத் தமிழிலக்கியங்கள் புனையப்பட வேண்டும்.

## 5. எழுத்தில் தவிர்க்க வேண்டிய மரபுமீறல்கள்

அதற்காக, புலத்தில் தமிழ்ப்பெண், ஆண்கள் தம்மோடு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் மேற்குலகப் பெண், ஆண்களைப் பார்த்து மனச் சபலமுற்று, மணவிலகல்கள், மறுமணங்களெனத் தடுமாறித் தடம் மாறும் போக்கினை அனுசரித்து எழுத வேண்டும் என்பதல்ல. அந்த மேலைத்தேயத்தவர்களிடம் பரம்பரை, பரம்பரையாக மணவிலகலும், மறு மணமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள். அதை அவர்கள் அவமானமாகக் கருதுவதோ, அப்படி நடப்பவரை இகழ்வதோ, தள்ளிவைப்பதோ இல்லை.தந்தையை விட்டு வேறு கணவனுடன் தன் தாய் வாழ்வதை அவளது மகன் அவமானமென உணர்வதில்லை. கவலைப்படுவதில்லை. தாழ்வு மனப்பான்மைக்குள்ளாகித் தளர்ந்து தன் எதிர்காலத்தைப் பாழ்படுத்திக் கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தமிழரின் நீண்ட கால மரபில், மண விலகல் மூலமான மறுமணங்கள் விபச்சாரமாகவே பார்க்கப்பட்டு வருகின்றன. மணவிலகல் செய்து, மறுமணம் புரியும் தமிழ் ஆண், பெண்களை அவர்களது உடன்பிறந்தோர் உறவு சுற்றங்களே ஒதுக்கி வைக்கிறார்கள். எமது சமூகம் கணவன் கொல்லப்பட்ட 90,000 அப்பாவித் தமிழீழ விதவை களையே மறுமணமின்றி வைத்திருக்கிறது. குழந்தைகளோடு பட்டினியில் வதங்கவிட்டுப் பாராமுகமாயுள்ளது.

இவை அனைத்திலும் பார்க்க மோசமான நிலை, அந்தக் கொப்புத்தாவல் நடத்தையாளரின் குழந்தைகளும், நம் சமூகத்தால் புறக்கணிக் கப்படுகிறார்கள். அவர்களின் மனங்கள் பாதிக்கப் படுகின்றன. தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகிச் செயற்பாடு குன்றி, நடைப்பிணங்களாகி அவர் களின் எதிர்காலம் நாசமாகிவிடுகிறது. எனவே இந்த விலகல் - மறுமணப் பண்பாட்டினால் ஏற்படும் தமிழ்ச்சமூக அழிவுகளை விளக்கும் இலக்கியங்கள், பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகக் கணவன், மனைவியர் தமக்குள் விட்டுக்கொடுப்பை மேற்கொண்டும், பொறுமையைக் கடைப்பிடித்தும், பிள்ளைகளின் மகிழ்ச்சியில், வளர்ச்சியில் மகிழ் வதில் தம் சொந்தக் கவலைகளை, ஏமாற்றங்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானங்களை மறந்தும் ஒன்றாக வாழ்வதை வலியுறுத்தும் இலக்கியங்கள் என்பவையே படைக்கப்பட வேண்டும். திரைப்படங்கள் கூட இன்றும் இம் மரபையே பேணுகின்றன.

அது போலப் புலத்தில் பிறந்து, பிற இனத்துப் பிள்ளைகளோடு ஒன்றாய்ப் படித்து, பழகும் தமிழ்ப் பிள்ளைகள் அவர்கள்மேல் காதல் வயப்பட்டுத் திருமணம் புரிந்து, பிற இன ஆணத்துள் கரு வாடாகக் கரைந்து, தம் இன நாமங்கெட்டு, அழிந்து போகும் அவலத்தை ஊக்கும் எழுத்துகளும் நிச்சயம், நல்ல மரபு மீறல்கள் ஆகமாட்டா. தமிழினத்துள் வேறு சாதிக்காரரைக் காதலித்தால் குழப்பிக் கெடுக்கும் நாம், வேறு இனத்தாரைக் காதலிப்பதை மட்டும் தெய்விகக் காதல் என்று சாட்டுச் சொல்லி மணம் செய்து வைப்பது எந்த விதத்தில் நீதியானது? எனவே பெற்றார்கள் நம் பிள்ளைகளுக்கு "இன்று உலகம் தமிழுக்கும், தமிழ்ப்பண்பாட்டுக்குமே முதன்மை கொடுக்கத் தலைப்படும் போது, தமிழர்கள், நாம், தாழ்வுமனப்பான்மை கொண்டு, வேற்றினங்கள் பற்றி உயர்வு மனப்பான்மை கொண்டு, தமிழின அழிப்பை, தற்கொலை முயற்சியை மேற்கொள்ளக்கூடாது" என்று சொல்லி வளர்க்கும்படி தமிழில் புலத்தில் இலக்கியம் படைக்கும் மரபைப் பேணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுதல் வேண்டும். தமிழ்ப் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், கடவுள் நம்பிக்கை என்பவற்றைத் தம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெற்றார்கள் ஊட்டி வளர்ப்பதைத் தலையாய இனப்பணியாகக் கொள்ளும்படி வற்புறுத்தும் இலக்கியங்கள் படைக்கப் பட வேண்டும்.

தாய் நிலத்திலும், தமிழ் எழுத்தாளர்கள் வாய்க்கட்டு, கைக்கட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில், நீதியையும்,நியாயத்தையும் மட்டுமே எழுதும் புனிதக் கடமை மரபை மீறி, கட்டுப் போட்டவர்களை மகிழ்வூட்டும் போக்கில் எழுதி, விருதுகள், பொற்கிழிகள், பொன்னாடைகள் பெறுவதும் நல்ல மரபு மீறலாகாது. அங்கு வழி தவறிவளரும் எங்கள் மண்ணின் இளந்தலை முறையினர் நல்வழிப்பட வைக்கும் - பண்பாட்டு வழிகாட்டும் இலக்கியங்களையும், எம்மினத்தைத் திருத்தி வாழ்வுபெற வைக்கக் கோரிக் கடவுளை வேண்டியழும் இலக்கியங்களையும் படைப்பதே தீங்கான மரபுமீறலைத் தவிர்க்கும் இலக்கியப் பணியாகும்.

### 6) துன்பங்களுக்கு மூல காரணிகள் இரண்டு!

மண்ணுலக வாழ்க்கை துன்பமானது எனும் பேருண்மையை வள்ளுவரும் “அற ஆழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிறவு ஆழி நீந்தல் அரிது" என்பது போன்ற குறள்களால் உணர்த்துகிறார்.பிரபல ஆங்கில நாவலாசிரியரான சாள்ஸ் டிக்கின்ஸ் போன்ற வேற்றினத்தவர்களும் "துயரங்கள் மயமான இந்த உலக மனித வாழ்வு" என்று தான் - this miserable mundane life என்றுதான் உலக வாழ்வைக் குறிப்பிடுகின்றனர். எனவே, மனிதவாழ்வு துன்பகரமானதுதான். அதனை அனைவரும் அனுபவத்திலும் காண்கிறோம்.

இந்த மனிதவாழ்வு துன்பகரமாக அமைவதற்குக் காரணங்கள் எவை? இவற்றுக்கும் வள்ளுவர் விடை சொல்கிறார். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம் போன்ற உயிரழுக்குகளால் ஆட்டிப்படைக்கப்பட்டு மனித உயிர் துன்பப்படுகிறது. இவை முதலாவது துன்பகாரணிகள்! தன் மெய், வாய், கண், மூக்கு, செவியாம் ஐந்து பொறிகளையும் அடக்கிப் பொய்யற்றவனான (இறைவனைப் போல்) உயிர் அழுக்குகளை அழித்துத் தூய ஒழுக்கம் தழுவியவர்கள் துன்பமின்றி வாழ்வார்கள் என்று உணர்த்தும் வகையில்,

**"பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடு வாழ்வார்!"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் வள்ளுவர். இது போன்று மனித வாழ்வைத் துன்பகரமாக மாற்றும் இரண்டாவது காரணி மனிதன் மனம், மொழி, மெய்யால் புரிந்த பாவங்களாகும். அந்தப் பாவங்கள் வேண்டிய விதத்தில் தனிமனிதர்களைத் தண்டிக்கின்றன. உரிய காலம் வரும்போது ஒட்டு மொத்தச் சமூகத்தையும் ஒரே நேரத்தில் ஒன்றாகத் தண்டிக்கின்றன. எனவே மனிதன் தன் உயிரழுக்குகளால் வதைக்கப்படுவது போலத் தனது பாவங்களுக்காகவும் தண்டித்து வதைக்கப்படுகிறான். மனித குலத்தின் இந்த இரண்டு உண்மை எதிரிகளையும் தனித்து மனிதனாலோ, சமூகத்தாலோ வெல்லமுடியாது. "இந்த இரண்டையும் அழித்து எம்மை நிம்மதியாக வாழ வைத்தருள்" என்று இறைவன் கால்களை இறுகப்பற்றி, வேண்டுவோருக்கு மட்டுமே இப்பகைகளை அழித்துத் துன்பத்திலிருந்து நீங்க முடியும். இதனை,

**"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது"**

என்று அன்றே சொல்லி விட்டார் வள்ளுவர். இவ்வாறு உயிர், மன அழுக்கு நீக்கம், பாவநீக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தனிமனிதர்கள் சரி, சமூகங்கள் சரி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள்ளும் வைக்கப்படுவார்கள் என்றும் வள்ளுவர்தான் கூறியுள்ளார்.

இன்றைய உலகில் சராசரி மனிதர்கள் இத்தகைய ஞானச்சிந்தனைகளில் ஈடுபட்டு விளக்கம் பெறத் தவறுகிறார்கள். உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு என்னும் அடிப்படைத் தேவைகளுக்கு மேலதிகமாக ஆயிரக்கணக்கான வீண் பகட்டுத் தேவைகளைப் பெருக்கி வைத்துக்கொண்டு, அவற்றை நிறைவேற்றுவதே தியானமாக ஆலாய்ப் பறக்கிறார்கள். அதனால் இத்தகைய ஞானச்சிந்தனைகளுக்கு அவர்கள் அவகாசம் பெறுவதில்லை.

ஆனால், "தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்", "முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்", "உப்புத்தின்றவன் தண்ணீர் குடிப்பான், தப்பு செய்தவன் தண்டனை கொள்வான்". "every action has its reaction" "அரசன் அன்றொறுப்பான், தெய்வம் நின்றொறுக்கும்!" போன்ற பழமொழிகளை அறியா தவர்கள் இல்லை என்றே சொல்லலாம். ஆனால், அவற்றின் ஆழப்பொருள்களைக் கருத்தில் எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்துக்கொள்வதோ, அதற்கமைய நடந்து கொள்வதோ, இல்லை. மனமறிந்து ஒரு குற்றத்தைச் செய்யும் பொழுது, இதற்கான தண்டனையை இப்பிறவியிலோ, எப்பிறவியிலோ நாம் ஏற்க வேண்டியே வரும் என்று அஞ்சி விலகி நடப்பதில்லை. சமூகத்தில் ஒவ்வொருவரும் இப்படி, இப்படிச் செய்யும் பாவங்களே சிறுதுளி பெரு வெள்ளமாகத் திரண்டு, அந்த ஒட்டு மொத்தச் சமூகத்தின் தண்டனைக்குரிய தலைவிதியாகமாறி, ஒரு காலகட்டத்தில் அச்சமூகத்தை உக்கிரமாக வறுத்தெடுக்கின்றன என்பது கசப்பான, ஆனால் மறுக்க முடியாத பேருண்மையாகும். இந்த யதார்த்தத்தை உணராமல், நாம் தாராள மாக நஞ்சை உண்டுகொண்டு, கடவுள் எம்மைக் காக்கவில்லை என்று திட்டி, மேலும் இறைநிந்தைப் பெரும் பாவத்தையும் நாம் தேடிக்கொண்டு வேரோடு அழியும் வேலையில் இறங்கக் கூடாது. இந்த ஆபத்துள் அப்பாவி மக்களை இறங்கத்தூண்டி அழிக்கும் பணியைத்தான் இன்று எழுதுகோலேந்தும் புரட்சி வீரர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் நம் பெரும் பகுதி எழுத்தாளர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். முதலில் இவர்கள் திருந்தினாலே சமூகமும் திருந்தி மீட்சி பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7) உலகை உய்விக்கும் உண்மை எழுத்தாளர்கள்

இவர்கள் போலல்லாது, உலக உயிர்கள் முழுமைக்கும் நன்மை புரிய என்றுழைத்துச் சென்ற மெய்ஞ்ஞானிகளான சித்தர்கள், தத்துவஞானிகள், தீர்க்கதரிசிகள், ஆன்மிகவாதிகள் போல அனைத்து உயிரினங்களினதும் நன்மை கருதிய எழுத்து உழைப்பில் தம்மைக் கரைத்துக் கொள்பவர்கள்தாம் உண்மையான எழுத்தாளர்கள் என்பது எனது தாழ்மையான நம்பிக்கை!

மண்ணை விண்ணாக்கவென வாழ்பவர்கள் அந்த மேன்மக்கள். தனிமனிதன் சார்ந்த, சமூகம் சார்ந்த ஒவ்வொரு வித்தியாசமான நிகழ்வுக்குமான காரணத்தையும், அந்நிகழ்வின் விளைவையும், எதிர்விளைவையும் ஆராய்ந்து தெரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

கடவுள் ஏற்கும், அறநெறிக்கு முதன்மை கொடுக்கும் வாழ்வில் மட்டுமே சகல செல்வங்களும், நிறைவுகளும் கிடைக்கும். எந்த எண்ணமோ, பேச்சோ, செயலோ கடவுள் ஏற்பார் என்று காணப் படும் பட்சத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். எல்லை கடந்த காமமூர்க்கம், ஆவேசம், பேராசை, பொறாமை, அகந்தை அழுக்குகளே நம்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்கள் செய்யத் தூண்டி, அவற்றிற்கான தண்டனைக்குள்ளாக்கி, நம்மை வதைக்கின்றன. இந்த உண்மையை உணர்ந்து அந்த உயிரழுக்கு களை அழிக்கக் கோரி நம்மைக் கடவுளிடம் அடைக்கலமாக்க வேண்டும். பாசத்துக்கு உரிய வர்களையும் கடவுளுக்கு அடைக்கலமாக்கித் தனக்குரிய கடமைகளைப் பற்றின்றி, பாசங்களின்றி நேர்மையாக ஒருவன் செய்து வர எல்லாரும் பாதுகாக்கப்படுவர். முன்வினைப்பயனான - விதி வசமான தண்டனைகளை, தூய ஒழுக்கம், விரதங்களோடு கூடிய அன்றாட உக்கிர முன்னோடி இறைவழிபாட்டால் வெல்லலாம் என்பது பலர் அனுபவரீதியாகக் கண்டு தெளிந்த உண்மை.

தான் நூறு வீதம் சரியென்று தெளிந்த செயலை ஒருவன் உலகமே எதிர்த்தாலும் செய்து முடிக்க முனைவது ஒன்றுக்குப் பல நன்மைகளைப் பரிசளிக்கும். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள்களை மட்டும் வேண்டும் சிக்கன, எளிமை வாழ்வில், கற்க, வழிபட அறஞ் செய்யப் போதிய ஓய்வும், பணமும் கிடைக்கும். குறுக்குவழிச் சம்பாத்தியங்களும் தவிர்க்கப்படும். பாவங்களும், பயனான தண்டனைகளும் தவிர்க் கப்படும். "கடவுள் கடைசிவரை கைவிடார்" என்று உறுதியாக நம்பி நேர்மையாக முனைப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்பவர்கள் நிச்சயம் காப்பாற்றவே படுகிறார்கள். ஒருவனதோ, சமூகத்தினதோ பாவக்கணக்குத் தீர்வதற்காகத் தர்மம் ஒரு சந்தர்ப்பத்தில் தற்காலிகத் தோல்வியைத் தழுவினாலும், அது ஒரு நாள் நிரந்தர வெற்றியை ஈட்டியே தீரும். குறை குடங்களான கோடி மனிதர்களை நம்பிப் பின்னால் போய் ஈற்றில் ஏமாறுவதற்குப் பதிலாக ஒரே ஒருவரான கடவுளை முழுமையாக நம்பி, வழிபட்டு நிச்சயம் வெற்றி பெறுவர் ஞானிகள்.

தன்குடும்பம், ஊர், சமூகம், நாடு, உலகம் எனும் சகல வட்டங்களுள்ளும் நியாயமாகத் தான்செய்ய வேண்டிய கடமைளைப் பொறுப்புணர் வோடு, கடவுள் துணைகொண்டு நேர்மையாக நிறைவேற்றுதல் மனி தனின் கடமையாகும். புண்ணியச் செயல்களையே விரும்பிச் செய்து வரும் ஒருவனுக்குப் புண்ணியப் பலனோடு, பின்னால் புகழும் கிடைத்து விடும். புகழையே இலக்காகக் கொண்டு செயல்களை மேற்கொண்டு வந்தால் புகழுக்குப் பதில் இகழ்ச்சியும், புண்ணியத்துக்குப் பதில் பாவமும் சேர்ந்து வாழ்வே நரகமாக நேரலாம். ஒருவன் தன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வழி, வேறு எவருக்கும், எவ்வுயிர்க்கும் தீங்கைத் தான் மனத்தாலும் எண்ணாமல் இருத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகம் தன் பாதுகாப்பை நிலைநாட்டப் போராடிக் கொண்டிருக்கும் போது அந்தப் போராளிகள் சரி, அந்தச் சமூகம் சரி இறுதி இலக்குக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய எந்தக் குறுகிய இலக்கையோ, இலாபங்களையோ நாடுவது முழு அழிவையே தரும்.

என் முன்வினைப் பயனாகவோ, அகந்தை, ஆவேசம், இச்சைவெறி உந்தலில் என்னை மறந்து ஓர் மூடச்செயலில் நான் ஈடுபட்டோ, ஆபத்துள் சிக்கி மாளும்படி இன்றோ, இன்னொரு நாளோ நேரலாம். அப்படி ஆபத்துக்குள் சிக்காராக மாட்டிக் கொண்ட நிலையில் "கடவுளே" என்று ஓலமிட்டும் மீளமுடியாமற் போகலாம்.

எனவேதான், எதிர்பாராத விதமாக அப்படி வரக்கூடிய இடர்கள் வராமலிருக்கவும், வந்தாலும் அவற்றிலிருந்து தப்பிப் பிழைக்கவும் வேண்டித்தான் ஞானிகள், ஆன்மிகவாதிகள் முன்னெச்சரிக்கையாகக் கடவுளுக்குத் தம்மை அடைக்கலமாக்கி, முன்கூட்டியே எந்நேரமும் வழிபடுகிறார்கள் என்பன போன்ற படிப்பினைகளை மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிய வைக்க எழுதுபவர்களாகவே அந்த அற்புத எழுத்தாளர்கள் விளங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இத்தகைய பெரும் எழுத்தாளர்கள் தாம், தாம் வாழுங்காலங்களில் தமது சமூகங்களை நிம்மதியடைய வைக்கும் மீட்சி வழிகளைக் காண்பித்தும், அவ்வழிகளில் ஊக்கத்தோடு உழைத்து வெற்றி பெறத்தூண்டியும் இலக்கியங்கள் படைக்கும் சமூகப் பொறுப்புணர்ச்சி மிக்கவர்களாகவும் விளங்குவார்கள்.


**– பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்நூலாசிரியரைப் பற்றி....!

ஈழத்துத் தமிழ் அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்பவர்
கவிஞர், பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்.
கவிஞர் ச. வே. தமிழையும், ஆன்மிகத்தையும்
இரு கண்களாகப் போற்றிவரும் ஆளுமையாளர்.
"யாப்பு இவரிடம் கைகட்டிச் சேவகம் புரிகிறது.
சந்தம் இவரைச் சொந்தம் கொண்டாடுகின்றது"
எனக் குறிப்பிடும் பேராசிரியர் சிவலிங்கராசா,
'ஈழத்துத் தமிழ்க் கவிதையின் மாறி வரும் பரிமாணங்களுக்கு
முகங் கொடுத்து, இன்றும் தம் தடத்தினையும், தளத்தினையும்
நிலைநிறுத்தியுள்ள ஒருசில கவிஞர்களுள் ச. வே. விதந்து
குறிப்பிடப்பட வேண்டியவர்' என்றார்.
ஆசிரியராகப் பணிபுரிந்த காலப் பகுதியில்
"இணுவில் கலை இலக்கியக் கழகம்",
இணுவைக் கந்தன் இளந்தொண்டர் சபை",
"கண்டி புசல்லாவ இலக்கிய வட்டம்" போன்ற அமைப்புகளை
உருவாக்கி, அவற்றின் மூலமும், தாம் கற்பித்த யாழிந்து
போன்ற கல்லூரிகள், கல்வி நிலையங்கள் மூலமும்
எண்ணற்ற கவிஞர்களையும்,
எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளார்.
கவியரங்குகளுக்காக மக்களைக் காத்திருக்க வைத்த
சாதனையாளராகவே இவரைப் பார்க்க வேண்டும்.
மக்களின் அனைத்துச் சமகால வரலாற்றுத் தடங்களையும்
கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் கவிதைகளினூடாக எதிர்காலத்
தமிழினம் தரிசனம் செய்யும் என்பதில் ஐயமில்லை!

— வ. க. பரமநாதன் (டென்மார்க்)

அச்சுப் பதிப்பு : [illegible] பதிப்பகம், மிசிசாகா, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org